பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 06 சனிக்கிழமை 22.08.2020 கதிர் 286

### இனி இது ரகசியம் அல்ல!

பத்திரிகையாளர்களை சில சமயங்களில் அரசியல்வாதிகள் கிள்ளுக்கீரைகளாக நினைத்து விடுகின்றார்கள்.

தங்களின் சிறுபிள்ளைத்தனமான – கேவலமான – அரசியல் சித்து விளையாட்டுகளுக்கு பத்திரிகைகள் மற்றும் பக்கம்02

# கூட்டமைப்புப் பேச்சாளர் பதவி சுமந்திரனிடமிருந்து பறிபோனது





## அவர் இல்லாத கூட்டத்தில் சம்பந்தன் முடிவு செல்வத்திடம் அந்தப் பொறுப்பு ஒப்படைப்பு

### கட்சிக் கொறடாவாக சித்தார்த்தன் நியமனம்

– நமது அரசியல் செய்தியாளர்–

கொழும்பு, ஓகஸ்ட் 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவி எம்.ஏ.சுமந்திரன் எம்.பியிடமிருந்து பறிபோனது. அந்த இடத்துக்கு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.நியமிக்கப்படுகின்றார். சுமந்திரன் பங்குபற்றாத தமிழ்த் கூட்டமைப்புத் தலைவர்களின் நேற்றிரவுக் கூட்டத்தில் வைத்து கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் தாமே தமது வாயால் இதனை முன்மொழிந்து அறிவித்தார் என நம்பகரமாக அறியவந்தது.

கட்சியின் நாடாளுமன்றக் கொறடாவாக இதுவரை இருந்த ஸ்ரீதரன் எம்.பியின் இடத்துக்கு புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பி. நியமிக்கப்படுகின்றார் என்றும் சம்பந்தன் அறிவித்தார் என்று தெரிகின்றது. பக்கம்02







### வீட்டில் வைத்து மைத்திரியின் வாக்குமூலம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்குமூலம் ஒன்றை பக்கம் 02

## கூட்டமைப்பின் பங்காளிகள் ஓரணியில் இந்தியத் தூதுவருடன் முக்கிய சந்திப்பு



கொழும்பு, ஓக. 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று சந்தித்துப் பேசினர்.

மாலை 5.30 மணி முதல் 7 மணி வரை சந்தித்து தமிழ் மக்களின் கரிசனைகள் தொடர்பில் கலந்து பக்கம் 02

## டில்லியின் பங்களிப்பு தீர்வுக்குத் தொடரும்

### கூட்டமைப்பை ஓரணியில் செயற்பட இந்தியத் தூதுவர் வலியுறுத்தினார்

இலங்கையில் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணும் பணியில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்ந்தும் இருக்கும்.

– இவ்வாறு உறுதிப்படத் தெரிவித்தார் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்தியத் தூதுவரை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று மாலை சந்தித்துப் பேசினர். இதன்போதே தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மீண்டும் நாடாளுமன்றத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்ட பக்கம் 02

# சுயநிர்ணய உரிமைக்கே தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் ஆணை வழங்கினர்!



### நேற்று நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் தெளிவான விளக்கம்

“ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தங்களது கட்சிக்கு நாட்டு மக்களின் ஆணை வழங்கியிருக்கின்றனர் எனக் குறிப்பிட்டார். அவரது கட்சிக்கு மக்கள் ஆணை கிடைத்திருக்கிறது என்பது சரியாக இருந்தாலும், இந்த ஆணை வடக்கு – கிழக்கிலிருந்தும் கிடைத்திருக்கிறது என்று சேர்த்துக் கூறுவது சரியானதல்ல.

“வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தளவில் அது அம்மக்களின் நிலைப்பாடாக நோக்கப்படலாகாது. இப்பிரதேசங்களில் தமிழ் உரிமைகள் பேணப்பட வேண்டும், தமிழர் தனித்துவம் பேணப்பட வேண்டும், இங்கு இரண்டு இனங்கள் வாழ்கின்றன, இரண்டு இனங்களும் சமத்துவம் ஆனவை, அரசமைப்புத் திருத்தங்கள் தமிழர்கள் சுயநிர்ணய உரிமையை உள்ளடக்க வேண்டும் என்ற ஆணையை வடக்கு, கிழக்கு மக்கள் இந்தத் தேர்தலில் ஏகமனதாக வழங்கியுள்ளனர்.

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பக்கம் 11

## போர்க்குற்றங்கள் நிகழவே இல்லை பொய்யுரைக்கிறார் கஜேந்திரகுமார்

### நாடாளுமன்றில் சரத் வீரசேகர மறுப்பு



இலங்கையில் இறுதிப் போரில் போர்க்குற்றங்கள் எதுவும் நடக்கவில்லை என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர்கள் இடையேயான முரண்பாடுகளை வசமாகப் பயன்படுத்தும் போக்கிரித்தனமான தந்திரோபாயத்தை அவர்கள் கையாளுக்கின்றனர்.

பத்திரிகைகள், பத்திரிகையாளர்கள் தங்களுக்குள் முரண்பட்டு நிற்பதனால் இரண்டுக்கும் இடையில் ஓடிப்பிடித்து விளையாடித் தங்களின் கீழ்த்தரமான அரசியலை நடத்தலாம் என்று எண்ணிச் செயற்படுகின்றார்கள்.

நேற்று ஒரு சம்பவம். ஓர் ஊடகத்தில் வெளியான பரபரப்புச் செய்தி தொடர்பில் எங்கள் அலுவலக செய்தியாளர், சில அரசியல் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். அவர்களின் கருத்துக்களைத் தொகுத்துத் தந்தார்.

அதில் ஓர் அரசியல் தலைவர் என் மதிப்புக்குரியவர். நம்பகத்தன்மை மிக்கவர் என நான் கருதுபவர். அவரின் கருத்தும் அந்தச் செய்தியில் இருந்தது.

அவரின் கருத்தை தொலைபேசியின் பதிவில் போட்டுக் காட்டி உறுதிப்படுத்தினார் என் செய்தியாளர்.

நேற்று மாலை எங்கள் செய்தி வெளியான போது இன்னொரு மதிப்புக்குரிய நண்பர் தொடர்பு கொண்டார்.

சம்பந்தப்பட்ட தலைவர் உங்கள் பத்திரிகையில் குறிப்பிட்டபடி உண்மையில் கூறினாரா என்று கேட்டார்.

நான் ஆம்' என்று கூறியமை மட்டுமல்லாமல், அவர் கருத்து வெளியிட்ட தொலைபேசி பதிவை நானே செவிமடுத்தேன் என்றும் சொன்னேன்.

என் நண்பர் நக்கல் சிரிப்புச் சிரித்தார்.

*“முதலில் மாறான செய்தி போட்ட ஊடகம் கூட அவரின கருத்தை வைத்துத் தான் அப்படி செய்தி வெளியிட்டது. அவர்களும் தொலைபேசிப் பதிவு வைத்திருக்கின்றார்கள். ஆனால் அது உங்களுக்குக் கூறியதற்குத் தலைகீழானது. அந்தக் கூற்றை வைத்துத்தான் அவர்கள் அப்படிச் செய்தி வெளியிட்டார். அதற்கு பதிலான நிலைப்பாட்டை உங்களுக்குத் தெரிவித்து பதிலடியான செய்தியையும் உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வைத்து விட்டார் அந்த புத்தர்.”* – என்றார் என் நண்பர்.

அந்தத் தலைவர் ஏன் அப்படிச் செய்தார் என்பது எனக்கு விளங்கவில்லை. நண்பரிடம் விசாரித்தேன்.

*“காரணம் ஸிம்பிள்...!”* – என்றார் அவர்.

*“அந்தப் பத்திரிகையை வைத்து மேலிடத்துக்கு கிலேசத்தை ஏற்படுத்துவது. உங்கள் பத்திரிகைச் செய்தியை வைத்து மேலிடத்துக்குத் தன்னை நல்லவராகக் காட்டுவது. இதுதான் அவர் திட்டம். அதில் அவர் வென்றும் விட்டார். நினைத்ததை சாதித்து விட்டார். நீங்கள் – ஊடகங்கள் – தான் பாவம். உங்களைச் சீண்டி விட்டுக் காரியம் பார்த்துக் கொள்கின்றனர் பிழைக்கத் தெரிந்த அரசியல்வாதிகள்”* – என்றார் அந்த நண்பர்.

உண்மைதான். ஊடகங்கள் ஒன்று சேர்ந்து இத்தகைய அரசியல்வாதிகளின் உண்மை முகங்களை அம்பலப்படுத்தாதவரை இங்கொரு தகவலும் அங்கொரு செய்தியும் வெளியிடும் இவ்வாறான அரசியல் தலைவர்களின் பரவணிப் பண்பு வென்று கொண்டுதான் இருக்கும்...!

★ ★ ★

அரசியல் கட்சிகளின் பதிவு நடவடிக்கைகளைத் தேர்தல் திணைக்களம் கையாண்டு வருகின்றது. பல கட்சிகளின் பிரதிநிதிகளை நேரடியாக அழைத்துத் தேர்தல் ஆணையம் விசாரித்து வருகின்றது.

இவ்வாரத்தில் நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சி, சந்திரகுமாரின் கட்சி, கருணாவின் கட்சி எல்லாம் விசாரணைக்கு அழைக்கப்பட்டன.

விக்கியின் கட்சி விசாரணை ஆலோசனைக் கூட்டம் முடிந்து விட்டது. அந்தக் கூட்டத்தில் பிறிதொரு கட்சியின் (கட்சி என்று கூறப்படும் தரப்பின்) பிரதிநிதியான சிவாஜிலிங்கம் எப்படி வந்து கலந்து கொண்டார் என்று தெரியாமல் திணைக்களம் முழுசுவதாகத் தகவல்.

இன்று ‘ஜனநாயகப் போராளிகள் கட்சி’ விசாரணைக் கூட்டத்தைச் சந்திக்கின்றது. இக்கட்சி 2015 தேர்தலிலேயே சுயேச்சையாகக் களமிறங்கியிருந்தது. ஆகையினால் கடந்த ஆறு வருடங்களுக்கு மேல் தாங்கள் கட்சியாகச் செயற்படுவதாக அதனால் ஆவண ரீதியாக நிரூபிக்க முடியும்.

ஆனால், விக்னேஸ்வரனிடம் கட்சி, ஐங்கரநேசனின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் போன்றவை 2018க்குப் பிறகு தான் உருவானவை என்று கூறப்படுகின்றது. அதற்கு முன்னர் இயங்கிய சில நம்பிக்கை நிதிய அமைப்புக்களைத் தமது கட்சிக்கான முன்னோடிக் கட்டமைப்பாக இக்கட்சிகள் காட்டக்கூடும். ஆனால் நான்கு வருடங்களுக்கு மேல் அரசியல் கட்சிகளாக இயங்காத தரப்புகளுக்கு கட்சி அங்கீகாரத்தைத் தேர்தல் ஆணையம் வழங்காது என்று தெரிகின்றது.

இந்தக் காலநீட்சித் தடையை சந்திரகுமாரின் கட்சியும், ஜனநாயகப் போராளிகள் கட்சியும் இலகுவில் தாண்டிவிடும்.

ஆனால், இந்தக் காலகட்டத்தில் கட்சிச் செயற்பாடுகளை ஒழுங்காக முன்னெடுத்தமை தொடர்பான பதிவுகள், வரவு – செலவுக் கணக்குகள், தேசிய மாநாடுகளை நடத்தியமை, கட்சிக் குழுக்களின் கூட்டங்களைக் கூட்டியமை போன்ற பதிவுகள் முதலிய தடைகளை அரசியல் கட்சிப் பதிவுக்கு விண்ணப்பித்த கட்சிகள் தாண்டுவது சுலபமானதல்ல.

ஆனால், சந்திரகுமாரின் சமூக நீதிக் கட்சி தேர்தல் ஆணையம் எதிர்பார்க்கும் பல தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் விதத்தில் ‘பக்கா’ ஆதாரங்கள், அறிக்கைகளோடுதான் பதிவு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகின்றது.

இவ்விடயத்தில் கருணாவின் கட்சிக்கும் பல இடர்பாடுகள், தடைகள் இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

எது, எப்படி என்றாலும் இன்னும் சில வாரங்களில் முடிவு வந்து விடும். சி.வீ. விக்னேஸ்வரன், கருணா, ஐங்கரநேசன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், தங்களின் கட்சிகளின் அங்கீகாரத்துக்கு இன்னும் சிலகாலம் காத்திருக்க வேண்டுமா?

அல்லது வரும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் அவர்களின் கட்சிகளுக்கு அங்கீகாரம் கிடைத்துவிடுமா? – என்ற முடிவு அடுத்த மாதத்தில் ஓரளவு தெளிவாகி விடும்...!

–மின்னல்–

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பத்து எம்.பிக்களைப் கொண்ட நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த விடயங்கள் பிரேரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வரையில், இவற்றைப் பகிரங்கப்படுத்துவதில்லை என்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று மாலை இந்தியத் தூதுவருடனான சந்திப்பின் பின்னர் நேற்றிரவு இரா.சம்பந்தனின் இல்லத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரோடு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) ஆகியோர் பங்கு பற்றினர்.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு சுமந்திரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாயினும், அவர் அதில் கலந்து கொள்ளவில்லை என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் அறியவந்தது.

எனினும், சுமந்திரன் இல்லாத அந்தக் கூட்டத்தில் வைத்து, கூட்டமைப்பின் புதிய பேச்சாளராக செல்வத்தை நியமிக்கவும், கட்சியின் கொறடாவாக சிறீதரனுக்குப் பதிலாக சித்தார்த்தனை நியமிக்கவும் சம்பந்தன் ஒப்புக் கொண்டார் என அறிய வந்தது.

தேசியப் பட்டியல் மூலம் நியமனம் பெற்றுள்ள கலையரசனின் இடத்துக்கு ஒரு வருடம் கழித்தோ அல்லது இரண்டரை வருடங்கள் கழித்தோ மாவை சேனாதிராசாவை நியமிக்கலாம் என்று கூட்டத்தில் ஓர் ஆலோசனை முன்வைக்கப்பட்ட போதும் மாவை சேனாதிராசா அதனை நிராகரித்து விட்டார் என அறியவந்தது.

அம்பாறை மாவட்டத்துக்கு என வழங்கப்பட்ட அந்த நியமனத்தைக் குழப்ப வேண்டாம் என்றார் மாவை சேனாதிராசா.

கட்சியின் பேச்சாளர் பதவியில் இருந்து சுமந்திரன் விலக்கப்படுவதனால் நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் தமிழரசுக் கட்சித் தலைவர் சார்பில் அவர் பங்குபற்றுவாரா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

வயது மூப்புற்றிருக்கும் சம்பந்தனின் சார்பில் அக்கூட்டங்களில் கூட்டமைப்பின் புதிய பேச்சாளர் செல்வம் கலந்து கொண்டு விடயங்களைக் கையாள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சியின் பேச்சாளர் என்ற முறையில் இனிமேல் இராஜதந்திரிகளையும், ஜெனீவா போன்ற சர்வதேச விவகாரங்களையும் சம்பந்தனுடன் சேர்ந்து செல்வம் அடைக்கலநாதனே கையாள வேண்டியிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# யாழ். மாவட்ட செயலகத்தில் சு.கவின் கிளை அலுவலகமா?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளைக் காரியாலமாக மாற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றனவா என அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் 16ஆம், 17 ஆம் மற்றும் 30ஆம் இலக்க அலுவலக அறைகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பயன்பாட்டுக்கு வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் மாவட்ட செயலாளருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வாறு அங்கஜன் அனுப்பிய கடிதத்துக்கு மேலதிகமாக ஜனாதிபதி செயலகம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு விடயம் தொடர்பாக ஓர் அலுவலகத்தை ஏற்பாடு செய்து அதற்கு 5 பணியாளர்களை வழங்குமாறு மட்டுமே கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் 5 பணியாளருடன் ஒரு அலுவலகம் மட்டும் எனக் கூறியபோதும் அங்கஜன் 3 அலுவலகங்களைக் கோரியிருப்பதால் அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் மற்றும் அமைச்சின் அனுமதி இன்றி அவற்றை வழங்குவதால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பல நெருக்கடிகள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் மாவட்ட செயலகத்திடம் கோரப்பட்ட அந்த 3 அறைகளையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மிக மும்மராமாக இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வீட்டில் வைத்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காக ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தன்னால் குறித்த பொலிஸ் பிரிவிற்கு ஆஜராக முடியாது எனவும் கொழும்பில் உள்ள தனது வீட்டிற்கு வந்து வாக்குமூலத்தை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

எனவே ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் குறித்த தினத்தில் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து வாக்குமூலத்தை பெற்றுக் கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரையாடினர்.

விசேடமாக நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பின்னரான தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நேற்றைய செய்திக் குறிப்பில் சுமந்திரன் ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர்’ என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.)

## டில்லியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பினர் தெரிவு செய்யப்பட்டமைக்குத் தனது வாழ்த்துகளையும் இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஓரணியில் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# சாகல நேற்று 10 மணி நேரம் வாக்குமூலம்

கொழும்பு, ஓக. 22

உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் நேற்று முன்னிலையான முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் சுமார் 10 மணி நேரம் நீண்ட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இந்த ஆணைக் குழுவின் பொலிஸ் பிரிவில் ஆஜராக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்பட்டிருந்தது.

எனினும் தன்னால் நேற்று ஆஜராக முடியாது என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆணைக் குழுவுக்கு அறிவித்து, தனக்கு இம்மாதம் 31 ஆம் திகதி ஆஜராக திகதி வழங்குமாறு கோரியுள்ளார்.

இந் நிலையில் நேற்று முற்பகல் சுமார் 10 மணியளவில் ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் ஆஜரான முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் 10 மணி நேர நீண்ட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போர்க்குற்றங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகள் இராஜாங்க அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் நேற்று வாதிட்டார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றும்போது குறுக்கிட்ட சரத் வீரசேகர, இலங்கையில் போர்க்குற்றங்கள் நடந்தன என்று அவர் சபையில் பொய் கூறுகின்றார் என்று கூறினார்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசு இறையாண்மையைக் காட்டி போர்க்குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்க முடியாது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் நேற்று சுட்டிக்காட்டியிருந்தார்.

அப்போது இடைமறித்த அமைச்சர் சரத் வீரசேகர, இந்த நாட்டில் எந்தவித போர் குற்றங்களும் இடம்பெறவில்லை. கஜேந்திரகுமார் இந்த சபையை தவறாக வழிநடத்துகின்றார் என்று கூறி அந்த உரைக்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

ஆனால், சபைக்குத் தலைமை வகித்த குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் அந்த ஆட்சேபனையை நிராகரித்து, கஜேந்திரகுமாரைத் தொடர்ந்து பேச அனுமதித்தார்.

# ஓர் இனத்தை மட்டும் முன்னிலைப்படுத்தி யாப்பு திருந்தம் அமைதல் ஆபத்தானது!

## எச்சரிக்கின்றார் ரவூப் ஹக்கீம்



தனியே ஓர் இனததை மாத்திரம் முன்னிலைப் படுத்துகின்ற யாப்பு திருத்தங்கள் வருவதென்பது ஆபத்தானது என நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எடுத்த எடுப்பிலேயே தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருகின்ற போது சாதகமான சில அம்சங்கள் முற்றிலும் இல்லாமல் செய்யப்பட்டு அதன் மூலம் மிகப்பாதகமான சூழ் நிலை ஏற்பட்டு விடுமா என்பது குறித்து அச்சம் நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# காலத்துக்கு ஏற்றாற்போல் பாடத்திட்டங்கள் புதுப்பிப்பு!

## ஜி.எல்.பீரிஸ் நடவடிக்கை

கொழும்பு, ஓக.22

தற்போதைய காலத் துக்கு ஏற்ற விதத்தில் பாடத்திட்டங்களை புதிப்பித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக எதிர்வரும் காலத்தில் அமைச்சரவை பத்திரம் ஒன்றை முன் வைப்பதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரி வித்துள்ளார்.

நாட்டில் உள்ள பிரதான பாடசாலைகள் சிலவற்றின் அதிபர்களுடன் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயர்தர வகுப்புக்களில் பல்வேறு பாடங்களுக்கு பாடப்புத்த கம் இல்லாத காரணத்தால் ஏற்பட்டுள்ள சிக்கல் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

# 19 ஆவது திருத்த நீக்கத்தில் கருத்துவேறுபாடுகள் உள்ளன!

## என்கிறார் ரிஷாத் பதியுதீன்



கொழும்பு, ஓக.22

19 ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் என்பதில் தங்களுக்கு கருத்து வேறுபாடு உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக் குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

மக்கள் வழங்கியுள்ள ஆணையை மதித்து பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மக்கள் எல்லோரும் திருப்திப்படக்கூடிய முறையில் அவர்களுடைய ஆட்சியை முன்னெடுத்து செல்வார்களாக இருந்தால் அது நாட்டுக்கு நல்லது எனவும் அவர் தெரிவித்தார்.

# நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தவேண்டும் - சஜித்

கொழும்பு, ஓக.22

அரச வேலைவாயடப்பு திட்டத்தில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் கூறியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தில் அரச பட்டாதாரிகள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இது தேசிய ரீதியில் தீர்க்கப்பட வேண்டிய விடயமாகும். பயிற்சி நடவடிக்கைகளுக்கு இணைக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டவர்கள் தற்போது நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் துறையில் பணிபுரியும் அரச பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு நியமனக் 



கடிதங்கள் வழங்கப்பட்டு பின்னர் ஒரு மாதத்தின் பின்னர் குறித்த நியமனங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அத்துடன் நிராகரிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு அரசாங்கம் உரிய பதில் வழங்க வேண்டும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மேலும் குறிப்பிட்டார்.

# மக்களுக்கான பொறுப்புக்கூறலில் இருந்து அரசு விலகமுடியாது!

## என்கிறார் விஜித ஹேரத்



மக்கள் முகம் கொடுக்கின்ற பொருளாதார பிரச்சினை, அரசியல் தொடர்பில் முகம்கொடுக்கின்ற பிரச்சினை என அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பு கூற வேண்டியது அரசாங்கத்தின் கடமையென நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை பிரகடனம் குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று விவாதம் நடைபெற்றது.

அந்த நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே விஜித ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது –

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர், தான் ஆட்சியில் இருக்கும் காலம் வரை மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கொள்கைப் பிரகடன உரையில் தெரிவித்திருந்தார்.

நேற்று ஜனாதிபதியால் கூறப்பட்ட கொள்கை பிரகடனத்தைப் பார்த்தோமேயானால், வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல், ஒரே நாடு ஒரே சட்டம் உள்ளிட்ட பல்வேறு எண்ணக்கருக்கள் கொண்ட விடயங்கள் அதிகம் காணப்பட்டன.

நாம் நாட்டின் வரலாற்றை எடுத்துப்பார்த்தோமேயானால், இவ்வாறுதான் இதற்கு முற்பட்டவர்களும் மிகவும் சிறப்பான கொள்கைப் பிரகடனங்களை முன்வைத்திருந்தனர்.

ஆனால் அவை நடைமுறையில் செயற்படுத்தப் படவில்லை என்பது கசப்பான உண்மை. அதாவது இதற்கு முன்னர் நாட்டை ஆட்சி செய்த அரசாங்கத்தின் ஜனாதிபதியும் இவ்வாறானதொரு கொள்கைப் பிரகடனமொன்றையே முன்வைத்திருந்தார்.

ஆனால், அவர் ஆட்சிப்பீடமேறி 8 மாத காலப்பகுதியிலேயே மக்கள் அவரை இனங்கண்டு;கொண்டனர். கொள்கைப் பிரகடன விடயத்தில் கூறப்பட்ட விடயம் என்ன. உண்மையான நிலைவரம் என்ன என்பதை மக்கள் உணர்ந்துகொண்டனர்.

அதாவது நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை அடைந்துள்ளோம். கொவிட் – 19 தொற்றால் அது மேலும் உக்கிரமடைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு நாம் தற்போது முகம்கொடுத்துள்ள இந்த பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு எத்தகைய செயற்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க இருக்கின்றது. மேலும் நாட்டில் வறுமை கோட்டில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை எவ்வாறு வலுவடையச் செய்வது. அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துள்ளது. டலஸ் அழகப்பெரும கூறியமையைப்போன்று வரலாற்றில் யாருக்கும் கிடைத்திராத பெரும்பான்மை தற்போதைய அரசாங்கத்துக்குப் கிடைத்துள்ளது.

மக்கள் வழங்கிய இந்த ஆணையால், அரசாங்கம் எந்தவிடயத்துக்கும் பொறுப்புக் கூற முடியாமல் இருக்க முடியாது.

மக்கள் முகம் கொடுக்கின்ற பொருளாதார பிரச்சினை, அரசியலில் தொடர்பில் முகம்கொடுக்கின்ற பிரச்சினை என அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பு கூற வேண்டியது அரசாங்கத்தின் கடமை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலைக் கல்வி ஆரம்பம் மாணவர் வரவு குறைவு!

கொரோனா அனர்த்தத்தின் பின்னர் அனைத்து பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி முதல் வழமை போல் ஆரம்பமாகிய நிலையில் மாணவர்களின் வரவு மந்த கதியில் உள்ளன.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்கள்சுமார் 3 மாத காலங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த நிலையில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக கடந்த 17 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது.

எனினும் பல்கலைக்கழக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 5 நாள்கள் கடந்துள்ள போதிலும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத் தில் உள்ள ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் வரவு வீதம் குறைவடைந்துள்ளது. மேலும் கடந்த காலங்களில் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இணை யத்தளங்கள் ஊடாகக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டமை சுட்டிக்காட் டத்தக்கது.

அத்துடன் சுகாதார வழிகாட்டல் ஆலோ சனைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்படுமாறு அனைத்து பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டமைக்கு அமைய பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# கடந்த கால அமைச்சில் ஊழல்கள் நிறைந்துள்ளன!

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்

கடந்த காலத்தில் அமைச் சில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன என தோட்ட வீடமைப்பு சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகு தியில் வைத்து ஊடகங் களுக்குக் கருத்து வெளி யிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர் குரல் இனி ஒலிக்கும்

இந்தப் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே இப்பத்தியில் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வந்தோம்.

தேர்தலின் பின்னர் அமையப் போகின்ற நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்பில் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை பற்றிய அட்சரகணிதம் பெரிய தாக்கத்தைச் செலுத்தாது, ஆனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆளுமை தாக்கத்தைச் செலுத்த முடியும் என்று குறிப்பிட்டிருந்தோம்.

கடந்த நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்பின் கருத்தியலை அழுத்தமாகவும், வலிமையாகவும், சட்ட நுணுக்கத்துடனும், உரிய சொல்லாடல் தேர்ச்சியுடனும் முன்வைக்கும் திறமையுள்ளவர்களாக சம்பந்தனும், சுமந்திரனும் மட்டுமே இருந்தனர்.

ஆனால் புதிய நாடாளுமன்றத்தின் கடந்த இரண்டு நாள் அமர்வுகளை நோக்கியவர்கள் – இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக நுட்பமாக அவதானித்தவர்கள் – நாம் முன்னர் குறிப்பிட்ட தமிழர் தரப்பு உறுப்பினர்களின் ஆளுமையும் இப்போது தாக்கம் செலுத்தத் தொடங்கியிருக்கின்றமையை நிச்சயம் அவதானித்திருப்பார்கள்.

நேற்றும் முன்தினமும் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரின் உரைகளை செவிமடுத்தோர் உறுதியாக இந்த முடிவுக்கு வந்திருப்பர்.

நீதியரசர் விக்னேஸ்வரனின் உரையில் அவரது பரந்த பட்டறிவு, அனுபவம் மற்றும் வயது முதிர்வு காரணமாக இனி என்ன நெருக்கடி வந்தாலும் முகம் கொடுக்கலாம் என்ற துணிவு போன்றவை பிரதிபலித்தன என்றால், கஜேந்திகுமாரின் உரையில் கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் நாடாளுமன்ற மேடை கிடைக்காததால் இருந்த எரிச்சல் வீச்சும், மரபணு வழியாக வந்த பேரனின் சொல்லாடல் பாய்ச்சலும் முழுஅளவில் எதிரொலித்தன எனலாம். ஆற்றொழுக்கான ஆங்கிலத்தில், சரளமாகத் தமிழர் தரப்பின் சுதந்திர உரிமைகளை அவர் முன்வைத்தமை தமிழர்களின் நாடாளுமன்றப் போராட்டம் மீது சற்று நம்பிக்கையைத் தருவதாக அமைந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த தேர்தலில் தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவுக்குக் கொடுத்த ஆணையை அங்கீகரித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆனால் வடக்கு, கிழக்கு மக்கள் தமிழர் தேசத்துக்கான ஆணையையே கொடுத்திருக்கின்றார்கள், அது ஜனாதிபதிக்கோ, சிங்களத் தேசியக் கட்சிகளுக்கோ வழங்கப்படவில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அதற்கான ஆதாரங்களையும் கோடி காட்டினார்.

சுதந்திரக் கட்சியில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதனும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் போட்டியிட்ட டக்ளஸ் தேவானந்தாவும் தமிழர் தேசத்துக்காகவோ வாக்குக் கேட்டார்கள் என்பதை எடுத்துரைத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அந்த வாக்குகள் தமிழர் தேசத்துக்கு எதிரான ஆணை அல்ல, அவையும் தமிழர் தேசத்துக்குரிய ஆணை தான் என்று மறுக்க முடியாத நல்லதொரு வாதத்தை முன்வைத்தார்.

“தமிழர் தேசம் என்ற நிலைப்பாடு ஏகோபித்த விதத்தில் அமைந்திருக்கின்றது. இந்த ஆணையை நாம் மீற முடியாது. கடந்த 72 வருடங்களாக இந்த ஆணை தமிழ் மக்களால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.” – என ஆணித்தரமாக அவர் எடுத்துரைத்தார்.

அது மாத்திரமல்ல, இன்னொரு முக்கிய விடயத்தையும் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எதிரொலித்திருக்கின்றார்.

இலங்கையின் இறையாண்மையை ஒப்புக்கொண்டு, ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஒரு நாட்டில் வாழும் ஒரு தொகுதி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலையில் நாட்டின் இறையாண்மை கேள்விக்குள்ளாக்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

ஓர் அரசு தனது சொந்தக் குடிமக்கள் மீது தாக்குதல் நடத்திக்கொண்டு, அதற்கான பொறுப்பிலிருந்து இறையாண்மையைக் காட்டித் தப்பி விட முடியாது என்று அப்பட்டமாக – வெளிப்படையாக – சிங்கள தேசத்தின் நாடாளுமன்றத்தில் முரசறைந்து கூறியிருக்கின்றார் அவர்.

“இலங்கையில் மோசமான குற்றச் செயல்கள் நடந்தன என உலகமும் கூறுகின்றது. குற்றஞ்சாட்டப்பட்ட தரப்புகளில் அரசே முதலிடத்தில் இருக்கின்றது. எந்தவொரு ஜனாதிபதியோ, நாடோ தனது நாட்டின் இறையாண்மையைக் காரணம் காட்டி இக்குற்றச் செயலுக்குக் பொறுப்புக் கூறுவதில் இருந்து தப்பிவிடமுடியாது.” – என்று முழங்கியிருக்கின்றார் அவர்.

இத்தகைய கருத்துக்களை இலங்கை நாடாளுமன்றத்தில் இனிமேலும் துணிச்சலுடன் எதிரொலிக்கப் போகின்றவர்கள் ஓரிருவர்களாகக் கூட இருக்கலாம்.

ஆனால் தென்னிலங்கையில் எந்தப் பெரிய ஜனநாயக வெற்றியை சிங்கள அரசுகள் ஈட்டினாலும், தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் தொடர்பான விடயங்களை நிலவிரிப்புக்குக் கீழ் போட்டு மூடிவிட முடியாது, அது சிங்களத்தின் நாடாளுமன்றத்திலும் தீனக்குரலாகத் தன்னும் எதிரொலிக்கும் என்பதற்குச் சான்றாக ஓரிருவர் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார்கள் என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

# பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா உறுதி!



பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு உரிய வகையில் நியமனங்கள் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது என சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளின் தொழில் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாத தரப்பினர் தற்பொழுது அரசாங்கத்தின் இந்த வேலைத்திட்டத்தை விமர்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தெளிவில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், ஜனாதிபதி ஆற்றிய உரையில் 60 ஆயிரம் பட்டதாரிளுக்கு நியமனம் வழங்கப்படும் என்று தெரிவித்தார். ஆனால் ஆவணத்தில் 50 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார். அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக அவசர அவசரமாக தெளிவற்ற வகையில் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்திருக்கின்றது.

நியமனங்களுக்குத் தெரிவாகாத பட்டதாரிகள் அது குறித்து மேன்முறையீடு செய்ய முடியும். இதற்கான நடவடிக்கையைத் தற்பொழுது அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பட்டதாரிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே தனது திட்டத்தை முன்னெடுத்துள்ளது என்று பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன தாம் பதவியில் இருந்த போது வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைத் தீர்வுக்கு எதுவுமே செய்ய தவறியவர்கள் இன்று அரசாங்கத்தின் திட்டங்களை விமர்சிக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டினார்.

# மக்கள் ஆணையை தவறவிட்டதால் அவர்கள் எம்மைத் தண்டித்தார்கள்!

## குற்றத்தை ஒப்புக்கொள்கிறார் மங்கள



கடந்த 2015ஆம் ஆண்டில் ஊழல்வாதிகளைத் தண்டிக்க மக்கள் ஓர் ஆணையை வழங்கினர். ஆனால் அந்தப் பொறுப்பை சரியாக நிறைவேற்றாதமையால் மக்களால் இந்தத் தேர்தலில் தண்டிக்கப்பட்டுள்ளோம் என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை, அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசா ரணை ஆணையகத்தில் சாட்சியமொன்றை வழங்குவதற்காக அவர் முன்னிலையாகி இருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களை சந்தித்த மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

ஊழல்வாதிகளைத் தண்டிக்க கடந்த 2015 ஆம் ஆண்டு மக்கள் தங்களது ஆணையை எங்களுக்கு வழங்கி இருந்தனர்.

எனினும் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் அந்தப் பணியை சரியாக முன்னெடுக்க முடியவில்லை. அது தான் உண்மை.

மேலும், அன்றைய காலத்தில் மைத்திரியே ஜனாதிபதியாக இருந்தார் துரதிர்ஷ்டவச மாக ரணில் விக்ரமசிங்கவுக்கு இன்னும் ஜனாதிபதியாக முடியவில்லை.

எங்களது அரசாங்கம், நாட்டை சரியான திசையை நோக்கி கொண்டுச் சென்றபோதிலும், அதனை முடிவுக்கு கொண்டுவர முடியவில்லை.

அத்துடன் எமது ஆட்சியில் சிறந்த வேலைத் திட்டங்கள் அதிகளவு முன்னெடுக்கப்பட்டன. ஆனால் மக்கள் கோரிய திருடர்களைச் சிறையில் அடைக்க முடியவில்லை.

எனினும் அது எனது வேலை அல்ல. அது சட்டத்தால் செய்யப்பட வேண்டிய ஒன்று. இவ்வாறு சட்டத்தால் முன்னெடுக்கபடாத செயற்பாட்டுக்கு மக்கள் எங்களைக் குறை கூறுகிறார்கள்.

எது எவ்வாறாயினும் எங்களது அரசாங்கம் திருடர்களைப் பிடிப்பதில் தோல்வியுற்றது. இதேவேளை ஜனாதிபதி சிறிசேனவிடமே பாதுகாப்பு அதிகாரங்கள் இருந்தன. எனவே அவ்விடயங்களுக்கு நாம் பொறுப்பு கூறமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தைத் தந்த ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம்!

கொழும்பு, ஓக. 22

ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுக்கு ஏமாற் றத்தைத் தந்துள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பௌத்த மதத்திற்கும், புத்த சாசனத்திற்கும், சிங்கள மக்களுக்கும் கூடுதலான சலுகைகளை அவர் பேசியமை போன்று தங்களுக்கு தென்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

19 ஆவது திருத்த சட்டத்தை ஒழிக்கப் போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார், அந்த வகையிலே ஒட்டுமொத்தமாக ஜனாதிபதியினுடைய சிந்தனையை வைத்துப் பார்க் கின்ற போது, இந்த நாட்டிலே வாழ்கின்ற தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம், மலை யக மக்களினுடைய வாழ்க்கை என்பது கேள் விக்குறியான ஒரு விடயமாகத்தான் அமையப்போகின்றது என்பது தெரிகின்றது. – என்றார்.

# மக்களுக்கு சேவையாற்ற அமைச்சு தேவையில்லை!

## என்கிறார் அங்கஜன் எம்.பி.



கொழும்பு, ஓக.22

அரசாங்கம் மக்களின் ஆணையை மதித்து, தனக்கு உரிமைக்காகவும், அபி விருத்திக்காகவும் பதவிகளைவழங்கியுள்ளதாகயாழ்.மாவட்டஅபிவிருத்திக் குழுவின் தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சு, இராஜாங்க அமைச்சுக் களை கேட்டு மக்கள் தனக்கு வாக்களிக்க வில்லை எனவும், அபி விருத்தி சார்ந்த மக்கள் ஆணையே தனக்கு கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மக்கள் பணிக்கு அமைச்சுப் பதவி தேவையில்லைஎனவும்அவர்இதன்போதுதெரிவித்தார்.

## க.பொ.த சாதர பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிப்பு!

கொழும்பு, ஓக.22

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் சனத் பி. பூஜித்த தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இன்றுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி நிறைவடையவிருந்த நிலையிலேயே இக் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர் ஊடாகவும் தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கமையவும் விண்ணப்பிக்குமாறு அவர் தெளிவுப்படுத்தியுள்ளார்.

## ஹற்றன் காசல்ரீ நீர்தேகத்தில் ஆணின் சடலம் கண்டெடுப்பு!

ஹற்றன் காசல்ரீ நீர்தேகத்திற்கு நீர் வழங்கும் கிளை ஆறானா டிக்கோயா ஆற்றில், ஆணொருவரின் சடலம் நேற்று (வெள்ளிக்கிழமை) மதியம் 2 மணியளவில் பொலிஸாரினால்கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் 40-35 இடைப்பட்ட வயது மதிக்கதக்கவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட ஆண், நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரழந்தாரா அல்லது நீர்த்தேக்கத்தில் பாய்ந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து ஆற்றில் எரிந்து சென்றார்களா எனப் பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள் ளனர்.

மேலும், மீட்கப்பட்ட சடலம் இது வரை யாருடையது என அடையாளம் காணப்பட வில்லை.

## இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை மீளவழங்குமாறு அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஓக 22

நல்லாட்சி அரசால் வழங்கப்பட்டுதற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள 6,548 திட்டமிடல் உதவியாளர்களுக்கான நியமனங்களை விரைவில் மீள வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாரால் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதேவேளை, கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட 1300 இரண்டாம் மொழி ஆசிரியர்களுக்கான நியமனங்களையும் விரைவில் மீள வழங்குமாறும் இவ்விடயங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார் எனவும் அரவிந்தகுமார் குறிப்பிட்டார்.

அந்த விடயத்தை கருத்திற் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் இது தொடர்பில் விசேட பிரேரணை ஒன்றை முன் வைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். அதன்மூலம் திட்டமிடல் உதவியாளர்களுக்கும், இரண்டாம் மொழி ஆசிரியர்களுக்கும் இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு விடை கிடைக்கும் எனவும் அரவிந்தகுமார் கூறினார்.

## அரச ஊழியர்களின் சீருடை புதிய சட்டமூலம் விரைவில்!

கொழும்பு, ஓக.22

அரச ஊழியர்கள் வாரத்தில் ஒரு நாள் பத்திக் அல்லது உள்நாட்டு ஆடையை அணிந்து வரவேண்டும் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்டத்தை விரை வில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

தனக்கு கிடைத்த அமைச்சு தொடர்பில் ஊடகவியலாளர்கள் நாடாளு மன்றத்தில் வைத்து வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பத்திக் கைத்தரி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பத்திக் ஆடை அணிந்தே நாடாளு மன்றத்துக்கு வருகைதந்திருந்தார்.

இந்நிலையில் அரச ஊழியர்களுக்கு ஆடை தொடர்பான சட்டம் இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக் கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாகனப் புகைப் பரிசோதனையை நீக்க ஆராய்கின்றது கோட்டா அரசு

கொழும்பு, ஓக.22

வருடம்தோறும் மோட்டார் வாகன உரிமங்களை வழங்குவதற்கான முன்னோடியாக தற்போதுள்ள வாகன புகைப் பரிசோதனை முறையைத் திருத்துவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

மோட்டார் வாகன உரிமங்களை வழங்க வாகன புகைப் பரிசோதனை சான்றிதழை வழங்குவது அவசியமா இல்லையா என்பது குறித்து முடிவு எடுக்கப்பட உள்ளது.

காபன் புகையை ஏற்படுத்தும் வாகனங்களை அனுமதிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார் என வாகன ஒழுங்குமுறை, பஸ் போக்குவரத்து சேவைகள், கராஜ் வண்டிகள் மற்றும் வாகனத் துறை ராஜாங்க அமைச்சர் திலம் அமுனுகம தெரிவித்தார்.

நாட்டின் மூன்று முக்கிய நிறுவனங்களால் இயக்கப்படும் சோதனை மையங்கள் உட்பட, ஊழல் சுழற்சியை உருவாக்கியுள்ள நிலையில், தற்போதுள்ள காபன் பரிசோதனை முறையை விரைவில் திருத்த அரசாங்கம் விரும்புகிறது.

ஒழுங்குமுறை தேவைகளைத் தவிர்ப்பதற்காக ஊழியர்களுக்கு லஞ்சம் வழங்குவது குறித்தும், மையங்களில் பணிபுரியும் பயிற்சி பெறாத சோதனை ஊழியர்கள் குறித்தும் பல முறைப் பாடுகள் வந்துள்ளன என அமைச்சர் தெரிவித்தார்.

சோதனைக் கட்டணங்களில் 10 வீதம் மோட்டார் போக்குவரத்துத் துறை சம்பாதித்துள்ளது. இது இப்போது ரூபா எட்டுக் கோடி ரூபாவாக வந்துள்ளது, மேலும் தற்போதுள்ள அமைப்பு காரணமாக பொதுமக்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகளை இன்னும் தீர்க்க வில்லை என்றும் அவர் கூறினார்.

## நாவிதன்வெளி பிரதேசசெயலக உத்தியோகத்தர்களுக்கு கொரோனா பரிசோதனை!

கொரோனா வைரஸ் சமூக மட்டத்தில் பரம்பலடைவதை தடுப்பதற்காக பரிசோதனைகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதற்கமைய நேற்று (வெள்ளிக்கிழமை) அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் வழிகாட்டல்களுக்கமைய நாவிதன் வெளி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொடர்பில் பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகள் செயலக வளாகத்தில் மேற்கொள்ளப் பட்டன.

இதன்போது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், உதவிப் பிரதேசசெயலாளர் என்.நவனீதராஜா, நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் மற்றும் பொதுசுகாதார அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் பங்கு பற்றினர்.

## பழிவாங்கல் ஆணைக்குழு முன் மலிக், சுமந்திரன், மங்கள, ராஜித

*முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மலிக் சமரவிக்ரம, மங்கள சமவீர மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் இன்று முன்னிலையாகினார்கள்.*

*வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர்கள் இவ்வாறு அழைக்கப் பட்டிருந்தார்கள்.*

# நாட்டுமக்கள் வழங்கிய ஆணையை ஜனாதிபதியும் பிரதமரும் மதிப்பார்கள்!

## மஸ்தான் நம்பிக்கை



கொழும்பு, ஓக.22

நாட்டு மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களும் மதித்து செயற்படுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், நாட்டு மக்கள் சுபீட்சமாக வாழக்கூடிய வகையில் இவர்கள் அனைவரும் செயற்படுவார்கள் எனத் தாம் எதிர்பார்க்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வெற்றி மமதையில் செயற்பட்டால் விபரீதத்தையே எதிர்கொள்வீர்கள்!

## நாடாளுமன்றத்தில் நேற்று ராஜபக்ஷ அரசுக்கு கூட்டமைப்பின் எம்.பி. ஜனா கடும் எச்சரிக்கை

வெற்றி, இந்தத் தேர்தல் வெற்றி மூலம் நீங்கள் கொள் ளும் மமதை சிலவேளை உங்களுக்கு விபரீதத்தை ஏற்படுத்தலாம். ஆணைப் பெண்ணாக்க, பெண்ணை ஆணாக்க மட்டுமே முடியாத அத்தனை அதிகாரங்க ளையும் கொண்டு தனக்கேற்ற வகையில் அரசமைப்பை உருவாக்க தனது நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்ற ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை இக்கணம் நினைவு கூர்ந்து கொள்ளுங்கள்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

### நான் ஒரு முன்னாள் போராளி

ஓர் இளம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தமிழ்த் தேசிய விடுதலை வேட்கை கொண்டவனாக எம் மக்களின் அபிலாஷைகளை ஆயுதப் போராட்டம் மூலம் மட்டும்தான் வென்றிட முடியும் என்ற அக்கால களநிலைமையில் ஆயுதம் ஏந்தி எம் மக்கள் விடுதலைக்காகப் போராடிய நான் அந்த ஆயுதப் போராட்டம் கற்றுத்தந்த படிப்பினைகள் காரணமாக அக்கால நிலைகளுக்கிணங்க ஆயுதப் போராட்டத்ததைத் துறந்து, தமிழ்த் தேசிய அபிலாஷைகளை ஜனநாயக வழி முறையில் பெற்றுக்கொள்ளாலாம் என்பதை உணர்ந்து, தமிழர் விடுதலை கூட்டணி எனும் அமைப்பின் ஊடாக நாடாளுமன்றத் தேர்தலுக்குள் உள் நுழைந்து 1989 தொடக்கம் 1994ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்து, அதன் பின்னர் தமிழ்த் தேசிய அரசியல் சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சிறு இடைவெளியின் பின் மீண்டும் என் உயிரிலும் மேலான மட்டக்களப்பு மாவட்ட மக்களால் ஐயம் திரிபற்ற முறையில் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு இறைவனுக்கும் என் உயிரிலும் மேலான மட்டக்களப்பு தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்தவனாய் எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

எனது உரையினை நான்கு விடயங்களை உள்ளடக்கியதாக ஆற்றலாம் என நினைக்கின்றேன்.

முதலாவதாக பௌத்தம் தொடர்பான இந்த நாட்டில் நிலவும் சரியான புரிந்துணர்வின்மை.

இரண்டாவது கலிங்கப் போர் கற்றுத்தந்த பாடங்களை முள்ளிவாய்க்கால் போர் மூலம் கற்றுக்கொள்ள விரும்பாமை.

மூன்றாவது அரசியல் தீர்வுக்காக நமக்கு ஏற்பட்ட வாய்ப்புக்களை நாமே புறம்தள்ளியமை, அதனால் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் ஏற்பட்ட அவலம். நான்காவதாக இவை கற்றுத்தந்த பாடங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் என்ன? என்பதுவே எனது உரையின் சாராம்சம் ஆகும்.

### இத்தேர்தல் முடிவுகள் எமக்கு ஒரு சறுக்கல்; அவ்வளவுதான்!

நடைபெற்று முடிந்த ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து எமக்கான மக்கள் ஆதரவு தளம் தடம்புரண்டதாக அல்லது சில சில்லறைகள் எமது மக்கள் ஆதரவைத் தடம்புரள வைத்தன என மார்தட்டிக் கூறுவது ஏற்க முடியாது ஒன்று.

தமிழ்த் தேசிய அரசியலை தமிழ்த் தேசிய மக்கள் உணர்வுகளைத் தெளிவாக புரிந்து கொண்டவன் என்ற வகையில் இந்தத் தேர்தல் முடிவுகள் எமக்கு ஏற்பட்ட ஒரு சறுக்கல், அவ்வளவுதான். அது தமிழ்த் தேசிய அரசியலின் முற்றுப்புள்ளியல்ல. இதை முதலில் நாம் அறிய வேண்டும் என்று கூறியவனாய் எனது உரையின் முதல் பகுதிக்குள் நுழைகின்றேன்.

### பௌத்த சித்தாந்தத்தை புரிந்து கொள்ளுங்கள்!

பௌத்தம், பௌத்தம் என்று உரத்து உரைக்கின்றீர்களே! பௌத்த சித்தாந்தத்தை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். பௌத்த மதத்தை ஸ்தாபித்த கௌதம புத்தனின் பின்னணியை நீங்கள் அனைவரும் மறந்துவிட்டீர்கள். உலகின் ஒரே ஒரு இந்து நாடான நேபாள நாட்டின் இந்து மன்னன் சுத்தோதனுக்கும் அவன் மனைவி மாயாதேவி மகா ராணிக்கும் இரண்டாவது இளவளாக இம் மண்ணில் அவதரித்தவர் சித்தார்த்த இளவரசனாவார். இவர் அடிப்படையில் இந்து மதம் சார்ந்தவர். இவரது வாழ்வு அரச சுகபோகங்களைத் துறந்ததாகவே இருந்தது. அரண்மனையை விட்டு ஒரு நாள் வெளியே வந்தபோது வீதியிலே மூப்பு, பிணி, சாக்காடு கண்டு வாழ்வின் அர்த்தம் உணர்ந்து, தன் அரச வாழ்வு துறந்து, தன் அருமை மனைவி மக்களைத் துறந்து, தன் குடும்பம், தன் மக்கள், தன் மதம், தன் இனம் என்பவற்றை மறந்து, உலகுக்கு ஒளியூட்டும் பௌர்ணமி தினம் ஒன்றில் பரிபூரணம் பெற்றவர். இங்கு ஓர் ஒற்றுமையை இனங்காண வேண்டும்.

சித்தார்த்த இளவரசன் பிறந்தது ஒரு பௌர்ணமி தினமென்றில், சித்தார்த்த இளவரசன் கௌதம புத்தராக புத்த கயாவில் ஞானம் பெற்றது ஓர் பொர்ணமி தினமொன்றில், சித்தார்த்த இளவரசன் கௌதம புத்தராக இலங்கையில் காலடி பதித்தது ஒரு பௌர்ணமி தினமொன்றில், சித்தார்த்த இளவரசன் கௌதம புத்தராக வாழ்ந்து பரிநிர்வாணம் அடைந்ததும் பௌர்ணமி தினமொன்றில்தான்.

> நீங்கள் பெற்ற இந்தப் பெரு வெற்றியை நம் நாட்டில் ஐக்கியம், ஒருமைப்பாடு, இன, மத, மொழி ரீதியான சமத்துவம் என்பவற்றைக் கட்டியெழுப்பப் பயன்படுத்துங்கள். படைகளின் மனோபாவம், படைத்தளபதிகளின் மனோபாவம், போரின் தர்மம், போரின் அதர்மம் அத்தனையும் புரிந்தவன் நான். ஏனென்றால் நானும் முன்னாள் போராளி. களமாடியவன். இதனால்தான் கூறுகின்றேன். போர்க் கால சமன்பாடு சமாதான காலத்துக்குப் பொருந்தாது.

### கௌதம புத்தர் தன்னை கடவுளாக ஒருநாளும் உருவகித்தவர் அல்லர்

கௌதம புத்தர் தன்னை கடவுளாக ஒருநாளும் உருவகித்தவர் அல்லர். தான் உருவாக்கிய பௌத்த நெறியை ஒருமதமாக முன்மொழியவுமில்லை. பௌத்தம் இலங்கைக்கு மட்டுமல்ல, சிங்களவருக்கு மட்டுமல்ல, உலகுக்கே ஒளியூட்டும் அர்த்தம் பொதிந்த வாழ்வியல் நெறி. இதை இந்த உயரிய சபையில் உரத்துக்கூறுவதில் எவ்வித தயக்கமும்மில்லை. கௌதம புத்தர் ஆரம்பத்தில் இந்து மதத்தைச் சார்ந்தவர் என்ற உண்மை வரலாற்றை மறக்காதீர்கள்.)

பௌத்த மதம் சிங்களத்துடன் தொடர்புபட்டது என்று முடிச்சுப் போடாதீர்கள். பௌத்தம் பின்னாளில் மதமாக உருவாகி, உலகளாவிய ரீதியில் வியாபித்தது. பௌத்தமும் சிங்களமும் இணைய முன்னரே பௌத்தமும் தமிழும் உலகளாவிய ரீதியில் இணைந்து பிணைந்தது வரலாறு. பௌத்த இலக்கியங்கள் பாளி மொழிக்கு முன்னர், சிங்கள மொழிக்கு முன்னர், தமிழ் மொழியில் ஆக்கப்பட்டமை வரலாறு.

### பௌத்தம் - இந்து - சிங்களம் ஒரு நேர் கோட்டில் வருபவை

தமிழின் ஐம்பெரும் காப்பியங்களான சீவகசிந்தாமணி, குண்டலகேசி, மணிமேகலை என்பன பௌத்த காப்பியங்களே. இவற்றை அடியொட்டியதாகவே சிங்கள காப்பியங்கள் உருவாகின என்பதே மறுக்க முடியாத உண்மை. எனவே, பௌத்தம் இந்து என்பதும் இந்து பௌர்ணமி என்பதும், பௌத்தம் பௌர்ணமி என்பதும், சிங்களம் பௌர்ணமி என்பதும் ஒரு நேர் கோட்டில் வருபவை என்பது உங்கள் கண்களுக்குப் புலப்படவில்லையா? எனது உரையின் பின் உங்கள் அகக்கண்களை திறந்து நிதானமாக யோசியுங்கள். இந்த நேர்கோட்டுத்தத்துவம் நமக்கிடையான உறவை ஒற்றுமையை, நெருக்கத்தை, பிரிக்க முடியாத பிணைப்பை உங்களுக்கு உணர்த்தும்.

### போர்வெறியின் விளைவு

எனது உரையின் இரண்டாவது பகுதிக்கு இப்போது நுழைகின்றேன். எனக்கு இப்போது ஞாபகம் வருகின்றது ராட்சிய விஸ்தரிப்பில் போர் வெறிகொண்டு அலைந்த சாம்ராட் அசோக சக்கரவர்த்தி கலிங்க மண்ணில் நடத்திய கலிங்கப் போர். கலிங்கப் போரானது போர் வெறிகொண்டு அலையும் ஆட்சியாளர்களின் மனதை அஹிம்சையின்பால் திருப்பிய வரலாற்று யுகமாற்றமாகும்.

கலிங்கப் போர் காரணமாக கலிங்க மண்ணில் ஓடிய மனித குருதி வெள்ளம், உயிரிழந்த சடலங்கள், உயிரிழந்த யானை, குதிரை படைகள் அத்தனைக்கும் மத்தியில் போர் வெற்றி இறுமாப்பில் யுத்த களத்தில் உலாவந்த சாம்ராட் அசோக சக்கரவர்த்தி, போர்க்கள நிலைமை கண்டு போரின் கொடுமை உணர்ந்து கவலையுற்று, மனுக்குலத்தின் பெறுமதி கண்டு தன் ஆதிக்க வெறி கலைந்து, – புத்தம் சரணம் கச்சாமி – என்று போர்க்களத்தில் நின்று உரத்துக் கூறி மறுவாழ்வு பெற்று, கௌதம புத்தனின் போதனை உணர்ந்து, அரச பதவிக்கு அடுத்துக் காத்திருந்த தன் மக்களை, தன் உறவுகளை, பௌத்த தூதுவராக உலகின் நாற்திசையும் அனுப்பி, பௌத்த தர்மத்தை வியாபிக்கச் செய்தான். அதன் காரணமாகதான் நமது இந்து சமுத்திரத்தின் முத்தான இரத்தினதுவீபம் இலங்கையில்– புத்தம் சரணம் கச்சாமி – என்ற கோமும் முத்தா, முதித்தா, சங்கா என்ற தத்துவவமும் பிரகாசிக்கத் தொடங்கின.

### கலிங்கத்துப் போரும் முள்ளிவாய்க்கால் போரும்

உலக வரலாற்றைப் புரட்டிய உலக வரலாற்றில் போர் வெறியை அகற்றிய உலக வரலாற்றில் மனுக்குலத்தின் பெறுமதியை உயர்த்திய கலிங்கப் போரை நினைக்கும்போது என் மனக்கண் முன் ஞாபகம் வருவது முள்ளிவாய்க்கால் போரும், அதனூடாக என் தமிழ்த் தேசிய உறவுகள் கண்ட அவலமுமே.

எனது பார்வையில் கலிங்க மண் கண்ட அவலம், துயரம், அழிவு அத்தனையும் என் முள்ளிவாய்க்கால் மண் கண்டது. ஆனால், கலிங்கப் போர் போர் வெறி கொண்ட சாம்ராட் அசோக சக்கரவரத்தியின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை முப்பது வருடகாலம் உள்நாட்டுப் போர் புரிந்து முள்ளிவாய்க்காலில் இறுதிப் போரை நடத்தி கலிங்கப் போருக்கு ஒப்பான பேரழிவை எம்மண்ணில் ஏற்படுத்திய உங்களிடத்தில் காணவில்லை என்பதுவே எனது மனக்கவலை.

கலிங்கப் போர் உலகுக்குப் பௌத்தத்தைப் பரப்பியது போல், உலகுக்கு உண்மை ஒளியை உணர்த்தியது போல், உலகிற்கு சமாதானத்தின் தேவையினை உணர்த்தியது போல், உலகுக்கு ஞானஒளியைப் போதித்தது போல், முள்ளிவாய்க்கால் அவலம் எதனையும் உங்களிடத்தில் ஏற்படுத்தவில்லை.

# வெற்றி மமதையில் செயற்பட்டால் விபரீதத்தையே எதிர்கொள்வீர்கள்!



## நாடாளுமன்றத்தில் நேற்று ராஜபக்ஷ அரசுக்கு கூட்டமைப்பின் எம்.பி. ஜனா கடும் எச்சரிக்கை

### முள்ளிவாய்காலில் போர் நிறைவு பின் மஹிந்த ராஜபக்ஷ கூறியவை

முள்ளிவாய்காலில் போர் நிறைவு பெற்ற பின் இன்றைய பிரதமரும் அன்றைய ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ அவ்வப்போது உள்நாட்டுக்கும், உலகிக்கும் கூறிய செய்திகள் எமக்கு ஒரு சிறு நம்பிக்கை ஒளிகீற்றைத் தந்தன. 13 போதாது, 13 இற்கு அப்பால் 13 பிளஸ் தருவேன் என்றார். - இந்நாட்டில் சிறு பான்மை, பெரும்பான்மையில்லை. அனைவருமே ஒருமித்த இலங்கையர் - என்றார். - வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பிரதேச வேறுபாடு இல்லை; அனைத்துமே எமது நாடு - என்றார். அதுவும் வடக்கு, கிழக்கு என்று எல்லா இடமும் சென்று நம் சுந்தர தமிழை தன் சிங்கள தமிழில் சிறப்பாகச் சொன்னார்.

ஐ.நா. செயளாலர் நாயகமும் வந்தார், அனைத்துலக தலைவர்களும் வந்தார்கள், அண்மைய இந்திய நாட்டின் அரசுத் தலைமையும் வந்தது. அவர்கள் அனைவரிடமும் இதனையே கூறினார். நாடுகளிடையே நடக்கும் ஒப் பந்தங்களில் மட்டுமல்ல, சர்வதேச சமவாயங்களில் ஏற்கப்படும் விடயங்கள் மட்டுமல்ல, உள்நாட்டிலும் சர்வதேச ரீதியான கலந்துரையாடலிலும் அரச தலைவர் மேற்கொள்ளும் கலந்துரையாடல் ஐயம்திரிபற

ஏற்கத்தக்க விடயமே. அதனால் நடந்தவை அனைத்தையும் நம்பினோம். ஆனால், எமது நம்பிக்கை நிறைவேறியதாக நான் நம்பவில்லை. அவர்களும் நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. கலிங்கப் போர் உலகுக்கு ஏற்படுத்திய பௌர்ணமி நிலவு ஒளி போல் முள்ளிவாய்க்கால் போர் வெற்றி எமது நாட்டில் பௌர்ணமி நிலவு ஒளியைப் பாய்ச்சவில்லை. இது கூட உங்கள் மீது நான் வாசிக்கும் குற்றப்பத்திரமல்ல. இது எனதும் என் மக்களின் மனக்கவலை மாத்திரமே.

### வாய்ப்புக்களைத் தவறவிட்டோம்

எனது உரையின் மூன்றாவது பகுதிக்கு இப்போது நுழைகின்றேன். அதாவது எமக்கு ஏற்பட்ட வாய்ப்புக்களைத் தவறவிட்டமை தொடர்பாக புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் ஒருவரின் மேற்கோளோடு இதனை ஆரம்பிப்பது பொருத்தம் என்று எண்ணுகிறேன். - வரலாற்றில் இருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் என்னவெனில் வராலாற்றில் இருந்து நாம் எதையும் கற்றுக்கொள்ளவில்லை - என்பதே ஆகும். அது எமக்கும் பொருந்தும் என்பதே எனது நிலைப்பாடு.

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற கோத்தோடு ஆட்சியைக் கைப்பற்றிய பண்டாரநாயக்கா ஆட்சி அமைத்த பின்னர் யதார்த்தம் உணர்ந்து தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வாவுடன் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் தீர்வு காணும் நோக்கில் இரு தலைவர்களும் இணைந்து பண்டா - செல்வா ஒப்பந்தத்தை உருவாக்கினர். ஆனால், ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்டு ஒப்பமிடப்பட்டமை காயமுன்னரே பௌத்த பேரினவாதிகளினதும், பௌத்த பிக்குகளினதும் அழுத்தங்களையும், எதிர்ப்புக்களயும் எதிர்கொள்ள முடியாத பண்டாரநாயக்கா இரு தரப்பு இணங்கி ஆக்கப்பட்ட ஒப்பந்தத்தை ஒப்பந்த ஒழுக்க விதிக்கு முரணாக ஒருதரப்பாகக் கிழித்தெறிந்தார்.

இத்தனைக்கும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் சமஷ்டிக்கு சமமாகவோ அல்லது இந்திய - இலங்கை ஒப்பந்நத்தின் அழுத்தத்தால் உருவான பதின்மூன்றாவது அரசமைப்பு சீர்திருத்தம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைக்கு ஈடானதானதோ அல்ல. அது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி பிரயோகம் சம்பந்தமான சரத்துக்களையே பெரும்பாலும் உள்ளடக்கியிருந்தது. ஒரு வேளை பண்டா - செல்வா ஒப்பந்தம் அமுலாகி இருந்தால் மூன்று தாசாப்தங்களாக எமது நாட்டில் தமிழ்த் தேசிய விடுதலை என்ற பெயரில் எமது தரப்பாலும் நாட்டின் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் அரசு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்ட போர், அதன் மூலம் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள், அரச உடைமைகள் அழிவு தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பதை ஒப்பீட்டு ரீதியில் பொருளாதார அபிவிருத்தியில் சிங்கப்பூரைவிட மிஞ்சியிருக்கலாம் என்பதை நான் இன்றும் நம்புகின்றேன்.

### போருக்குக் காரணம் என்ன?

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட பரிணாம வளர்ச்சியே எமது நாடு எதிர் நோக்கிய உள்நாட்டுப் போர். இது நாட்டின் ஒருமைப்பாட்டை சவாலுக்குட்படுத்தியதன்றி நாட்டின் இன ரீதியான, மத ரீதியான, மொழி ரீதியான முரண்பாட்டைத் தோற்றுவித்தது. இந்த முரண்பாட்டின் முதிர்ச்சி வடக்கு, கிழக்கு தமிழ் இளைஞர்களிடையே ஆயதப் போராட்டத்தைத் தோற்றுவித்ததது. இந்தப் போராட்டத்தின் விளைவாக கோவிந்தன் கருணாகரம் ஆகிய நான் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினூடாக ஜனா எனும் பெயர் சூடி களமாடி விழுப்புண் பெற்று இறப்பின் தறுவாய்க்குச் சென்று இன்று உங்கள் முன் இந்த உயரிய சபையில் உரையாற்றுகின்றேன். இது மட்டுமல்ல போர் உச்சக்கட்டம் நிலவிய காலத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் இன்றைய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் தலைமையில் உருவாக்கப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அரசமைப்பு வரைவு இந்த உயரிய சபையில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

இது போன்று பல வட்ட மேசை மகாநாடுகள், சர்வகட்சி கலந்துரையாடல்கள் எனப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு யாவும் கிடப்பில் போடப்பட்டு நம் நாடு போர் இருளில் மூழ்கிச் சின்னாபின்னம் அடைந்தமை நாட்டின் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களாகும்.

இவையெல்லாம் நாம் தவறவிட்ட சந்தர்ப்பங்களே. இதுகூட நான் உங்கள் மீது வாசிக்கும் குற்றப்பத்திரிகை அல்ல. இது எனதும் என் மக்களின் மனக்கவலை மாத்திரமே.

### போர்க் காலத்தின் சமன்பாடுகள் சமாதான காலத்துக்குப் பொருந்தா

எனது உரையின் இறுதிப்பகுதிக்கு இப்போது நுழைகின்றேன். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவு உங்களுக்குப் பெரும் வெற்றி. இதில் எந்தவித ஐயமும் இல்லை. ஆனால், இந்த வெற்றிக்கான காரண காரியங்களை நான் ஆராய முனையவில்லை.

நீங்கள் பெற்ற இந்தப் பெரு வெற்றியை நம் நாட்டில் ஐக்கியம், ஒருமைப்பாடு, இன, மத, மொழி ரீதியான சமத்துவம் என்பவற்றைக் கட்டியெழுப்பப் பயன்படுத்துங்கள். படைகளின் மனோபாவம், படைத்தளபதிகளின் மனோபாவம், போரின் தர்மம், போரின் அதர்மம் அத்தனையும் புரிந்தவன் நான். ஏனென்றால் நானும் முன்னாள் போராளி. களமாடியவன். இதனால்தான் கூறுகின்றேன். போர்க் கால சமன்பாடு சமாதான காலத்துக்குப் பொருந்தாது.

போர் வெற்றி, இந்தத் தேர்தல் வெற்றி மூலம் நீங்கள் கொள்ளும் மமதை சிலவேளை உங்களுக்கு விபரீதத்தை ஏற்படுத்தலாம். ஆணைப் பெண்ணாக்க பெண்ணை ஆணாக்க மட்டுமே முடியாத அத்தனை அதிகாரங்களையும் கொண்டு தனக்கேற்ற வகையில் அரசமைப்பை உருவாக்க தனது நாடாளுமன் றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட இன்று மக்களால்தேர்ந்தெடுக்கப்படவில்லைஎன்பதைஇக்கணம்நினைவுகூர்ந்துகொள்ளுங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவது பிரிக்க முடியாத - பிளவுபடாத ஒரு மித்த நாட்டுக்குள் ஒன்றாகச் சமத்துவமாக வாழும் உரிமையையே. எமது கோரிக்கையைப் பிழையாக பொருள்கோடல் செய்யாதீர்கள். தென்னிலங்கை மக்களை எமது கோரிக்கை தொடர்பாக பிழையாகத் தவறாக வழிநடத்தாதீர்கள். நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து எமது நாட்டைக் கட்டியெழுப்புவோம். நீங்கள் பெற்ற தேர்தல் வெற்றிக்கும் தேர்ந்தெடுத்த அரசுக்கும் வாழ்த்துக்கள் கூறி விடைபெறுவது முன்னாள் போராளியும் இந்நாள் ஜனநாயகவாதியான ஜனா என அறியப்பட்ட கோவிந்தன் கருணாகரம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# புளொட்,ரெலோ தனிவழியா? அப்படி எதுவுமே கிடையாது!

## செல்வமும் சித்தார்த்தனும் இன்று காலை காலைக்கதிருக்கு உறுதியாகத் தெரிவிப்பு





ந.லோகதயாளன்

கொழும்பு, ஓகஸ்ட் 21

'தமிழர் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு: புளொட், ரெலோ தனிவழி' என்று இன்று காலை சில ஊடகங்களில் வெளி யான செய்தியை அந்த இரண்டு கட்சிகளினதும் தலைவர்களான த.சித்தார்த்தன் எம்.பியும், செல்வம் அடைக்கலநாதன் எம்.பியும் முற்றாக மறுத்தனர்.

“அப்படியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை, எடுக் கப்படவும் மாட்டாது” என்று இன்று காலையில் 'காலைக் கதிர்' நாளிதழுக்கு இருவரும் உறுதிபடத் தெரிவித்தனர்.

“தனிவழி என்ற செய்தி சுத்தப் பொய். அப்படி ஒரு முடி வும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான செய்தியுடன் எனக்கோ அல்லது எனது கட்சிக்கோ எந்தத் தொடர்பும் இல்லை. நாம் கூட்டமைப்பாகவே இயங்குகின்றோம். எமக் குள் இருக்கும் விட யங்கள் தொடர்பில் நாம் கூட்டமைப் புக்குள்ளேயே பேசுவோம்.” - என்றார் செல்வம் அடைக் கலநாதன் எம்.பி.

இது குறித்து புளொட் தலைவர் த.சித்தார்த்தனும் கருத்து வெளியிட்டார்.

“கூட்டமைப்பை உடைக்கவோ அல் லது அதி லிருந்து வெளியேறவோ நாம் ஒரு போதும் எண்ணி யவர்கள் அல்லர்.

“அப்படி தனிவழி என்று வெளியான செய்தி பொய். உண்மைக்கு மாறானது. அதை மக்களிடம் தெளிவு படுத்துங்கள்.

“இன்னமும் (இன்று காலை வரை) கூட்டமைப் பின் ஒழுங்கு முறையான ஒரு கூட்டமும் நடக்கவில் லை. இன் றைக்கு சில சமயம் கூட்டம் நடக்கலாம். நடந்த பின்னர்தான் என்ன செய்வது என்பது குறித்து யோசிக்கலாம். ஆனால், தனி வழி போகின்ற முடிவு எதையும் எடுக்க மாட்டோம்.

"அதாவது கூட்டமைப்பை விட்டு வெளியே போகும் எந்த முடிவையும் எந் தச் சந்தர்ப்பத்திலும் எடுக்க மாட்டோம்.

“தமிழ்க் கூட்டமைப்பின் தலைமைத் துவத்தில் இருக்கும் பதவிகளை ஒரு கட்சி மட்டும் தனித்து வைத்திருக்க கூடாது. எல்லாக் கட்சிகளும் பகிர்ந்து வைத்திருக்க வேண்டும் என்பது எமது கோரிக்கை. அதற்காக நாம் பிரிந்து தனிவழி போவோம் என்று கூறுவது அபத்தம்.” - என்றார் சித்தார்த்தன்.

## ஊடக சந்திப்புக்குச் சென்ற மணிவண்ணன் கட்சி அலுவலகத்திலிருந்து வெளியேற்றம்




(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 21

ஊடகச் சந்திப்பு நடத்தச் சென்ற விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் ஆதரவாளர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்த மணிவண்ணன் தனது அரசி யல் நிலைப் பாடு தொடர்பில் அறிவிக்க இன்று கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற் பாடு செய்திருந்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள் வதற்காக மணிவண்ணனும் ஆதரவாளர்களும் கட்சி அலுவலகத்துக்கு சென்றபோது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின ரால் மணிவண்ணனும் அவரின் ஆதர வாளர்களும் வெளியேற்றப்பட்டமையு டன் கட்சி அலுவலகமும் மூடப்பட்டது. இதனால் மணிவண்ண னின் ஆதர வாளர்கள் கடும் அதிருப்தி அடைந்தனர்.

## நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமனம்

கொழும்பு, ஓக 21

9 ஆவது நாடாளுமன்றத்தின் சபா நாய கர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலை மையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிய மிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் இரண்டாம் நாள் அமர்வு இன்று முற்பகல் 9.30 மணி யள வில் ஆரம்பமானது. இதன்போது சபாநாய கர் தலைமையிலான நாடாளுமன்ற தெரி வுக்குழுவில் 12 உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன செல்வம் அடைக்கலநாதன், டக்ளஸ் தேவா னந்தா, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, பிரசன்ன ரணதுங்க, லக்ஷமன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், விஜித ஹேரத், ஆகியோர் 9 ஆவது நாடா ளுமன்றத்தின் தெரிவுக் குழுவில் பெயரிடப் பட்டுள்ளனர்.

## விக்னேஸ்வரனின் கருத்துக்கு சஜித் அணி சபையில் எதிர்ப்பு

### உரையின் ஒரு பகுதியை நீக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஓக 21

தமிழ்மக்கள்தேசியக்கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை யின் ஒரு பகுதியை ஹன்சார்ட்டிலி ருந்து நீக் குமாறு ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப் பினர் மனு நாணயக்கார சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று சபையில் புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு வாழ்த்துத் தெரிவித்து உரை யாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் சி.வி.விக்னேஸ்வரன்,

"உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்று தமிழ். இலங்கை யின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ். அந்தத் தமிழ் மெ ழியில்எனதுஉரையைஆரம்பிக்கின் றேன்” என்று கூறியிருந்தார்.

இந்திநிலையில் இன்று முற்பகல் 9.30 மணியளவில் நாடாளுமன்றம் கூடியபோது சபையில் ஒழுங்குப் பிரச் சினையை முன்வைத்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் மனு நாணயக்கார,

இலங்கையின் முதல் சுதேச குடிமக் களின் மொழி தமிழ்மொழி என விக் னேஸ்வரன் கூறிய கருத்து நாடாளு மன்ற நடவடிக்கைகள் ஹன்சார்ட் பதி வில் உள்ளடக்கப்படுவது தவறாகும். இத னால் இந்தக் கருத்து அதிலிருந்து நீக்கப் பட வேண்டும் என்று சபாநாய கரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது மனு நாணயக்கார வின் அந்த ஒழுங்குப் பிரச்சினையை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கள் பலர் மேசையில் தட்டி வரவேற் றனர்.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வ தாக சபாநாயகர் தெரிவித்தார்.

## கோட்டாவின் கொள்கைப் பிரகடனம் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றம்

கொழும்பு, ஓக 21

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் ஆற்றிய அரசின் கொள்கைப்பிரகடனஉரைவாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் நேற்று முன் வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதம் இன்று நடை பெற்றது.

இந்தநிலையிலேயே ஜனாதிபதி யின் கொள்கைப் பிரகடனம் வாக் கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்த் தன தெரிவித்தார்.

அத்துடன் நாடாளுமன்றம் எதிர் வரும் 27 திகதி காலை 9.30 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத் தக்கது.

## அரசு மமதையோடு செயற்பட்டால் நாடு மீண்டும் இனவாத சகதிக்குள்!

### சிறிதரன் எம்.பி சபையில் எச்சரிக்கை



கொழும்பு, ஓக 21

இன்றைய அரசு அறுதிப் பெரும்பான் மையோடு, தங்களுக்கு ஒரு பெரும் பான்மை பலம் இருப்பதாக கருதிக் கொண்டு ஒரு மிகக்கூடிய மமதையோடு செயற்பட முனைவார்களானால் மீண் டும் இந்த நாடு ஒரு இனவாத ரீதியான சகதிக்குள் தள்ளப் படும் என நாடாளு மன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியிருந் தது. இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாட்டின்ஒருமுக்கியமானபிரச்சினை தொடர்பில் நாட்டின் தலைவர் பேசாமல் விட்டமையானது நாட்டின் ஒரு துரதிஷ்ட நிலையாக எம்மால் பார்க்கப்படுகிறது.

இந்த நாட்டில் வாழ்கின்ற இரு தேசிய இனங்கள் சிங்கள தேசிய இனமும், தமிழ் தேசிய இனமும். ஆனால் தமிழ் தேசிய இனம் கடந்த 70, 80 ஆண்டு களாக இந்த மண்ணிலே பல இனப்படு கொலைகளுக்கும், அழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்ட ஒரு இனம். அதனால் தான் அவர்கள் ஒரு நீண்ட கால போராட் டத்திற்குள் தங்கள் வாழ்க்கையை அர்ப் பணித்திருந்தார்கள்.

குறிப்பாக இன்றைய அரசு அறுதிப் பெரும்பான்மையோடு, தங்களுக்கு ஒரு பெரும்பான்மை பலம் இருப்பதாகக் கரு திக் கொண்டு ஒரு மிகக்கூடிய மமதை யோடு இதனை நடத்த முனைவார்க ளானால் மீண்டும் நாடு ஒரு இனவாத ரீதியான சக்திக்குள் தள்ளப்படும் என்ப தற்கு வரலாறு அவர்களுக்கு ஒரு பாடத் தைக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்ப தல்ல.

ஏனென்றால் நீண்ட நெடும் வரலாற் றுப் பாடங்களை அவர்கள் கற்றுக் கொண்டவர்கள். இந்த ஒரே தீவினுள் இரண்டு தேசிய இன மக்கள் வசிக்கின்ற போதும் அவர்கள் தமக்குரிய அரசிய லையும் பொருளாதாரத்தையும் வெவ் வேறு அடிப்படையில் கொண்டுள்ள னர்.

இந்த உண்மைகளை அனுசரித்து ஏற்கனவே நடந்திருந்தால் இலங்கை பொருளாதாரத்தின் அபிவிருத்தியை எட்டுவதில் எவ்வித பிரச்சினைகளையும் கொண்டிருக்கமாட்டாது - என்றார்.

# ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் தமிழர் பிரச்சினைகள் உள்ளடக்கப்படவில்லை!

## இரா.சாணக்கியன் கவலை தெரிவிப்பு



கொழும்பு, ஓக.22

கொள்கை பிரகடன உரையில் ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கருத்து வெளியிடாமை கவலையளிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்றக் கட்ட டத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக்குக்கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையின் எந்தவோர் இடத்திலும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தொடர்பாகவோ, 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர் பாகவோ எந்தவித கருத்துக்களையும் அவர் தெரிவிக்காதமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித் தார்.

அரசியல் தீர்வு ஒன்று இல்லா விட்டால் தமிழ் மக்களின் இருப்பும் எதிர்காலமும் கேள்விக்குறியாகும் என்பதைத் தமிழ் மக்கள் மனதில் வைத்து இனிவரும் காலங்களில் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி காலைக்கதிர் நடாத்திய பாடசாலை மாணவர்களுக்கான மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020**

மேற்படி போட்டியில் பெருமளவிலான மாணவர்கள் ஆர்வத்துடன் பதில்களை அனுப்பி வைத்திருக்கிறன்றனர். எதிர்பார்த்ததை விட அதிகளவான பதில்கள் கிடைத்திருப்பதனால், குறிப்பிட்ட காலத்தினுள் மதிப்பீட்டுப் பணிகளை நிறைவுறுத்த முடியவில்லை. அதனால் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரங்களை இன்றைய பத்திரிகையில் வெளியிட முடியவில்லை.

வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் எதிர்வரும் 26.08.2020 திகதி காலைக்கதிர் பத்திரிகையில் வெளியிடப்படும்

# கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 918 அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 16 பேர் அடையாளம் காணப்பட்ட நிலையிலே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பியுள்ள 16 பேருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் சிறுபான்மையினருக்கு சில தீமைகள் உள்ளன!

## சுட்டிக்காட்டுகிறார் இராதாகிருஷ்ணன்



கொழும்பு, ஓக.22

ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையில் சில நன்மைகள் உள்ள போதும், சிறுபான்மையின மக்களுக்கு தீமைகளும் உள்ளன என நாடாளு மன்றஉறுப்பினர்வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து இனிவரும் நாடாளுமன்ற அமர்வுகளில் பிரஸ்தாபிக்க இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

# வெளிநாடுகளிலிருந்து 135 பேர் நாடு திரும்பினர்

கட்டாரிலும் தாய்லாந்திலும் சிக்கியிருந்த மேலும் 135 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 1.20 மணியளவில் கட்டாரின் டோஹா விலிருந்து 47 பேரை ஏற்றிய கட்டார் விமான சேவைக்கு சொந்தமான QR 668 எனும் விமானம், கட்டு நாயக்கசர்வதேசவிமானநிலையத்தை வந்தடைந்துள்ளது.

தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து88பேரைஏற்றிய ஸ்ரீ லங்கன் எயார்லைன் ஸின் UL 403 எனும் விமானம் நேற்றுக் காலை கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இவ்வாறு வருகை தந்த அனைவரும் கட்டுநாயக்க சர்வதேசவிமானநிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# நாடாளுமன்றில் உரையாற்ற எதிர்க்கட்சிக்கு நேரம் போதாது!



கொழும்பு, ஓக. 22

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இம்முறை நாடாளு மன்றத்தில் உரையாற்ற குறைந்தளவு நேரமே ஒதுக்கப்பட்டுள்ளதாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்குத் தான் விவாதத்திற்கு அதிக நேரம் தரப்படுகிறது. எனினும், ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என மனோ கணேசன் குறிப்பிட்டார்.

60 - 40 என்ற அடிப்படையில் 60 வீதம் எதிர்க்கட்சிக்கு வழங்கப்படவேண்டும். இங்கு 60 வீதத்தை ஆளுங்கட்சி எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

ஜனநாயகம் கிடைக்க வேண்டும் என்றால் எதிர்க்கட்சிக்கு தான் விவாதம் செய்வதற்கு அதிக நேரம் கொடுக்கப்பட வேண்டும் என மனோகணேசன் வலியுறுத்தினார்.

# இலங்கைக்கு ரூ.9,200 கோடிக்கான திட்டம் நன்கொடையாக வழங்கியது இந்திய அரசு!

கொழும்பு, ஓக. 22

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்காக இந்திய அரசால் வழங்கப்பட்ட 51 ஆயிரத்து 700 கோடி ரூபாய் பெறுமதியான ஒட்டுமொத்த திட்டங்களில் 9,200 கோடி ரூபாய் பெறுமதியான திட்டங்கள் நன் கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை அலகை நிர்மாணிப்பதற்கான திட்ட வழிநடத்தல் குழுக் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை அலகை நிர்மாணிப்பதற்கான திட்ட வழி நடத்தல் குழுவின் கூட்டம், பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் தலைமையில் கடந்த புதன் கிழமை இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

இந்த திட்ட அமுலாக்கலின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது. இந்திய உயர்ஸ்தானிகராலயம், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் திட்ட முகாமைத்துவ திணைக்களம், நிதி அமைச்சின் கண்காணிப்பு பிரிவு மற்றும் ஒப்பந்தகாரரான மல்வத்தை கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகளும் மத்திய பொறியியல் உசாத்துணை பணியக திட்ட ஆலோசகரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.



இந்த திட்டமானது 262 மில்லியன் இலங்கை ரூபாய் பெறுமதியுடன் உயர் பெறுபேற்றைக்கொண்ட சமூக அபிவிருத்தித் திட்டம் என்ற அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல் மூலம் கிழக்கு மாகாணத்தைச் சூழவுள்ள மக்கள் நன்மையடைவர்.

மட்டக்களப்பில் சுகாதார பராமரிப்பு அலகுகளை நிர்மாணித்தமை, 1990 சுவசெரிய அவசர அம்புலன்ஸ் சேவை போன்ற உதவித்திட்டங்களை அமுல் படுத்துவதன் மூலமாக இலங்கையின் சுகாதார உட்கட்டமைப்பை மேலும் வலு வாக்குவதில் இந்தியா தொடர்ந்தும் தனது உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கிறது.

கொவிட் -19 பரவல் நெருக்கடியான காலப்பகுதியில் இந்தியா 25 தொன்கள் நிறையுடைய அவசர மருந்துகள் மற்றும் மருந்துப்பொருள்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது.

அத்துடன் கண்டியிலுள்ள தேசிய வைத்தியசாலையில் கொவிட் தனிமைப்படுத்தல் விடுதி ஒன்றை அமைப்பதற்காக சார்க் அபிவிருத்தி நிதியம் ஊடாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் விசேட உதவியாக வழங்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்துடன் இந்திய அரசு மேற்கொண்டுவரும் மக்களை இலக்கு வைத்த அபிவிருத்தி ஒத்துழைப்பின் தொடர்ச்சியாக இந்தத் திட்டங்கள் அமைந்துள்ளன.

அதாவது, இலங்கைக்கு இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த திட்டங்களில் 92 பில்லியன் இலங்கை ரூபாய் பெறுமதியான திட்டங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# துணை ஜனாதிபதி வேட்பாளராகக் கமலா ஹாரிஸை உத்தியோகபூர்வமாக அறிவித்தது ஜனநாயகக் கட்சி!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ஜனநாயக கட்சியின் சார்பில் துணை ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹாரிஸ் போட்டியிடுவார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வொஷிங்டனில் காணொளி வழியாக நடைபெற்ற ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டின் போது, துணை ஜனாதிபதி பதவிக்கான கட்சியின் வேட்பாளராக கலிபோர்னியா மாகாண செனட் சபை உறுப்பினர் கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்டார்.

இதன்மூலம், அமெரிக்காவில் அந்தப் பதவிக்கான வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படும் முதல் இந்திய அமெரிக்கர் மற்றும் கறுப்பினத்தைச் சேர்ந்த முதல் பெண் என்ற பெருமைகளை கமலா ஹாரிஸ் பெற்றுள்ளார்.

இதன்போது உரையாற்றிய கமலா ஹாரிஸ், 'ஜனநாயக கட்சி என்னை துணை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தமையை நான் ஏற்கிறேன். இந்த அறிவிப்பை நான் அனைத்து கறுப்பின பெண்களின் உரிமைக்காக போராடும் பெண்களுக்காக சமர்ப்பிக்கின்றேன்.



இனிமேல் தீர்மானத்துடன் போரிடுவோம், நம்பிக்கையுடன் போரிடுவோம், ஒவ்வொருவருக்குள் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்திக்கொண்டு உறுதியுடன் போராடுவோம்.

அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்ப்பின் தலைமை தோல்வி அடைந்த தலைமை. அமெரிக்காவில் நடக்கும் உயிரிழப்புகளை, சோகங்களை அரசியல் ஆயுதங்களாக ட்ரம்ப் பயன்படுத்துகிறார். ட்ரம்ப்பின் தலைமை தோல்வியால்தான் கொரோனாவில் லட்சக்கணக்கான உயிர்களை இழந்தோம், வாழ்வாதாரத்தை இழந்தோம்.

தேசத்துக்கு முக்கியமான பணிகளை, வித்தியாசமாக, சிறந்ததாகச் செய்யும் வேட்பாளரைத் தான் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யவேண்டும். கறுப்பினத்தவர், வெள்ளையினத்தவர், லத்தீன், அமெரிக்கர், ஆசியர்கள் என அனைவரையும் பிரிக்காமல் ஒன்றாக இணைப்பவராக அந்த ஜனாதிபதி இருக்க வேண்டும். தேசத்தின் எதிர்காலத்தை அனைவரையும் சேர்ந்து கட்டமைக்க முயல்பவராக ஜனாதிபதியாக இருக்க வேண்டும். அந்த சிறந்த ஜனாதிபதியாக நாம் ஜோ பைடனை தேர்வு செய்ய வேண்டும்' என பேசினார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் குடியரசு கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாகப் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பைடன் போட்டியிடுகிறார்.

## கிழக்கு இந்தோனேஸியாவில் 6.9 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

கிழக்கு இந்தோனேசியாவில் 6.9 ரிக்டர் அளவில் நேற்று (வெள்ளிக்கிழமை) நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த நில அதிர்வை அடுத்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

இந்த நிலநடுக்கம், சுலேவசி தீவில் கட்டாபுவுக்கு தெற்கே 220 கிலோமீற்றர் தொலைவிலும் 600 கிலோமீற்றருக்கும் அதிகமான ஆழத்தில் கடலுக்கடியிலும் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, நிலநடுக்க மையப்பகுதியான பண்டா கடலின் தெற்கே குபாங் நகரில் கட்டடங்கள் அதிர்ந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் சேத விவரங்கள் இன்னும் தெரியவரவில்லை.

இதேவேளை, அதிகமான ஆழத்தில் ஏற்படும் நிலநடுக்கங்கள் ஆழம் குறைந்த மேலோட்டமான நிலநடுக்கங்களை விடவும் பாதிப்பு குறைவாகவே இருக்கும் என அமெரிக்க புவியியல் ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தன்னைத் தானே புதிய ஜனாதிபதியாக மாலி இராணுவத் தளபதி அறிவிப்பு!

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் தன்னை தானே புதிய ஜனாதிபதியாக இராணுவ உயரதிகாரி அஸிமி கொய்டா அறிவித்துக் கொண்டுள்ளார்.

அஸிமி கொய்டாவிற்கு, எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆதரவு அளித்துள்ளனர். நாட்டில் ஆட்சியை இராணுவம் கைப்பற்ற, இவர் முக்கிய காரணமாக இருந்தார் எனக் கூறப்படுகிறது.

தலைநகர் பமாகோவில் உள்ள இராணுவ அமைச்சகத்தில், உயரதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்திய கொய்டா, இதன்பிறகு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் -

'நான் என்னை முதலில் அறிமுகம் செய்துகொள்கிறேன். என் பெயர், கர்னல் அஸிமி கொய்டா. நான், மாலி இராணுவப் படையின் தலைவர். இன்று முதல், மாலி அரசை நான்தான் வழிநடத்துவேன். இனி,



எந்த தவறும் நடக்காது' எனக் கூறினார்.

2013 ஆம் ஆண்டு முதல் ஆட்சி புரிந்து வந்த 75 வயதான இப்ராஹிம் பவுபக்கர், பயங்கரவாதத்தை ஒடுக்கத் தவறியதாகவும், 2018 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் முறைகேடு செய்து, மீண்டும் ஆட்சியை பிடித்ததாகவும் கூறி, மக்கள் அவருக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தியதுடன், அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதன் விளைவாக, நாட்டில் இராணுவ புரட்சி ஏற்பட்டது. இதனையடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத்தினர், ஜனாதிபதி கெய்டாவையும், பிரதமர் பவ்பவ் சிஸ்சேவையும், கைதுசெய்து, வீட்டுகாவலில் வைத்தனர். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கொய்டா தனது பதவியை இராஜினாமா செய்தார்.

தற்போது, நாட்டுக்கு தலைவர் என்று யாரும் இல்லாமல் போயுள்ள நிலையில், இராணுவத்தின் மூத்த அதிகாரியான அஸிமி கொய்டா, நேற்று தன்னை நாட்டின் ஜனாதிபதியாக அறிவித்துக்கொண்டார்.

இதனிடையே, மாலியில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை அகற்றிவிட்டு, ஆட்சியை இராணுவம் கைப்பற்றியுள்ளதற்கு பல்வேறு உலக நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் வெளியிட்டுள்ளன.

## இஸ்ரேல், சவூதி ஆகியவற்றுடன் நல்லுறவு வைக்கத் தயார்! — ட்ரம்ப்



இஸ்ரேலுக்கும் சவுதி அரேபியாவுக்கும் நல்லுறவை ஏற்படுத்த தயாராக இருப்பதாக, அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அவர் இந்த கருத்தினை வெளியிட்டார். இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

'இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தத்தில் சவுதி அரேபியா பங்கேற்க விரும்பும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படி விரும்பினால் அதை சாத்தியமாக்குவதற்கான வேலைகளை நான் செய்வேன்' என கூறினார்.


இஸ்ரேலுக்கும், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையே தூதரக நல்லுறவை ஏற்படுத்துவதற்கான வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா அண்மையில் அறிவித்தது.

3 நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக நடைபெற்று வந்த பேச்சுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் இஸ்ரேலுடன் தூதரக உறவை ஏற்படுத்தியுள்ள முதல் வளைகுடா நாடாகவும், மூன்றாவது அரபு நாடாகவும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியுள்ளது. இதற்கு துருக்கி, ஈரான் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

எனினும், பாலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்த ஒப்பந்தம் சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்று அமெரிக்காவும், ஐக்கிய அரபு அமீரகமும் கூறி வருகின்றன. இந்த ஒப்பந்தத்தை ஐ.நா.வும், சீனா உள்ளிட்ட நாடுகளும் வரவேற்றுள்ளன.

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணையைத் தயாரித்தது!



அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான விவகாரத்தில் அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே கடுமையானமோதல் நிலவுகின்ற நிலையில், ஈரான் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பாலிஸ்டிக் மற்றும் கப்பல் ஏவுகணைகளை காட்சிப்படுத்தியுள்ளது.

'ஸ்னாப் பேக்' நடைமுறை என்று அழைக்கப்படும் ஈரான் மீதான ஐ.நா. பொருளாதாரத் தடைகளை மீண்டும் செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சர்ச்சைக்குரிய பொறிமுறையை செயற்படுத்தப்போவதாக வொஷிங்டன் கூறிய ஒரு நாள் கழித்து இந்த ஏவுகணைகளை ஈரான் காட்சிப்படுத்தியது.

ஈரானில் தேசிய பாதுகாப்பு தொழில் தினமான நேற்று (வியாழக்கிழமை) இரண்டு புதிய ஏவுகணைகளை அதிகாரிகள் அறிமுகப்படுத்தினர் என அரசு நடத்தும் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதலின் போது, பக்தாத்தின் சர்வதேச விமான நிலையத்திற்கு வெளியே கொல்லப்பட்ட ஈரானிய புரட்சி பாதுகாப்புப் படையின் குட்ஸ் படைப்பிரிவுத் தளபதி காஸ்ஸெம் சோலேமானீ ஈராக் போராளித் தலைவர் அபு மஹ்தி அல் முஹாண்டிஸ் ஆகியோரின் பெயர்கள் இந்த இரு ஏவுகணைகளுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

நிலத்திலிருந்து செல்லக்கூடிய 'தியாகி ஹஜ் காசிம்' பாலிஸ்டிக் ஏவுகணை 1,400 கி.மீ (600 மைல்) தொலைவுக்கு சென்று தாக்கக் கூடிய வல்லமை படைத்தது.

கடலிலிருந்து செலுத்தக்கூடிய 'தியாகி ஹஜ் மக்தி' ஏவுகணை 1,000 கி.மீ (400 மைல்) தூரத்தை தாக்கும் திறன் கொண்டது.

மேலும், இவற்றுடன் ஈரானில் தயாரிக்கப்பட்ட இரட்டை இருக்கைகள் கொண்ட கோவர் போர் விமானத்திற்கான ஜெட் என்ஜினையும் ஈரான் இராணுவம் அறிமுகப்படுத்தியது.

இதுகுறித்து ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரூஹானி கூறுகையில், 'இரண்டு வருடங்களுக்குள் நாங்கள் 300 கி.மீ முதல் 1,000 கி.மீ வரை உயர்த்தியுள்ளோம் என்பது ஒரு பெரிய சாதனை' என கூறினார்.

## கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் பிரேஸிலில் 35 லட்சம் கடந்தது!

பிரேஸிலில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை, 35 லட்சத்தைக் கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, பிரேஸிலில் மொத்தமாக 35 லட்சத்து ஐந்தாயிரத்து 97ஹி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட் - 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்டுள்ள இரண்டாவது நாடாக விளங்கும் பிரேஸிலில், இதுவரை ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 423 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் 44 ஆயிரத்து 684 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டதோடு, ஆயிரத்து 234 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது வரை ஏழு லட்சத்து 39 ஆயிரத்து 267 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் எட்டாயிரத்து 318 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர். மேலும், இதுவரை 30 லட்சத்து 95 ஆயிரத்து 454 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

# தனி வீட்டுத் திட்டத்தில் மோசடி!

## சபையில் ஜீவன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக 22

மலையகத் தனி வீட்டுத்திட்டத்தில் மோசடி செய்தவர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்படுவார்கள் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மலையகம்என்றாலேதோட்டத்தொழில் மட்டும்தான் என சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், விவசாயம் உட்பட பல தொழிலகள் அங்கு உள்ளன. வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் எனப் பலர் உருவாகியுள்ளனர். எனினும், மலையகம் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு என்ன காரணம்? தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் அவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவில்லை.

ஆனால், மக்களின் உண்மையான பிரச்சினைகள் எவை என்பதை ஜனாதிபதி கண்டறிந்துள்ளார். மலையகத்திலுள்ள ஆறு பிரதான வைத்தியசாலைகளிலும் போதுமான வசதிகள் இல்லை. பாடசாலைகளிலும் வளங்கள் முழுமையாக இல்லை. இவை தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிலோன் டீ என்ற நாமம் சரிவை சந்தித்துள்ளது. அதனை கட்டியெழுப்பவேண்டும். இந்த விடயமும் ஜனாதிபதியின் உரையில் இடம்பெற்றது. சிறுதோட்ட உரிமையாளர்களின் பிரச்சி னைகளையும் எடுத்துரைத் துள்ளார். மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இன்று நிறையப் பேர் வெளிநாடு சென்று கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்கு உள் நாட்டில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்.

மலையகத்தில் 4 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன என்று கூறப்பட்டது. ஆனால், கண்காணிப்பு குழுமூலம் ஆராய்ந்தோம். 500 வீடுகளே கட்டப்பட்டுள்ளன. ஏனையவை அரைகுறையில் உள்ளன. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என பழமொழியொன்று உள்ளது. எனவே, வீட்டுத் திட்டத்தில் ஊழல் செய்தவர்களை கட்டாயம் சட்டத்தின் முன் நிறுத்துவோம் - என்றார்.

## சபையில் ஜீவனுக்கு திகாம்பரம் பதிலடி!

மலையகத் தனி வீட்டுத் திட்டத்தில் உண்மை எது, பொய் எது என்பது மக்களுக்கு தெரியும். எனவே, தந்தைபோன்றே இன்று மகனும் பொய்யுரைக்கின்றார்.

- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது அரசியல் வாழ்வில் மூன்றாவது முறையாகவும் நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளேன். வாக்களித்து அங்கீகாரம் வழங்கும் நுவரெலியா மாவட்ட மக்களுக்கு முதலில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாம் 400 வீடுகளைக்கூட கட்டவில்லை என இராஜாங்க அமைச்சர் (ஜீவன் தொண்டமான்) ஒருவர் குறிப்பிட்டுள்ளார். டன்ன் தோட்டத்தில் 350 வீடுகளும், பொகவந்தலாவயில் 350 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டன. இவை இரண்டைக்கூட்டினால்கூட 500 ஐ தாண்டிவிடுகின்றது. எனவே, இராஜாங்க அமைச்சர் கணக்கில் 'வீக்' போல் தெரிகிறது.

குறிப்பாக தந்தைபோன்றேபொய் பேசுகின்றார். உண்மை எதுவென மக்களுக்குத் தெரியும் என்பதால் எமக்குப் பிரச்சினை இல்லை. அதேவேளை, நாட்டுக்கு நன்மைபயக்கக்கூடிய அரசின் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம். தீங்கு விளைவிக்கக்கூடிய யோசனைகளை எதிர்ப்போம் - என்றார்.

## மாகாண சபைத் தேர்தலில் சஜித் தரப்பு 'மெகா' கூட்டு

**ஐ.தே.கவும் இணைப்பு என்கிறார் அலவத்துவல**

ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்துக்கொண்டு பரந்தபட்ட கூட்டணியின் கீழ் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள்சக்திதயாராகவே இருக்கின்றது என்று அக்கட்சியின் உறுப்பினர் ஜே.சி.அலவதுவல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கியமக்கள்சக்தியைஉருவாக்கி குறுகிய காலப்பகுதிக்குள் 54 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான முதல் சுற்றில் நாம் வெற்றிபெற்றுவிட்டோம். எனவே, அடுத்தடுத்த சுற்றுகளில் பலமான அணியாக களமிறங்கி வெற்றிபெற திட்டமிட்டுள்ளோம்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஓர் கூட்டமைப்பு. அதில் கட்சிகள் இணையலாம். ஐக்கிய தேசியக் கட்சி இணைந்தால்கூட அக்கட்சியையும் இணைத்துக்கொண்டு பரந்தப்பட்ட கூட்டணியின்கீழ் தேர்தலை சந்திக்கலாம். அது மேலும் வலுவாக இருக்கும். எனவே, ஐ.தே.க. எம்முடன் இணைவதை நாம் வரவேற்போமே தவிர ஒருபோதும் எதிர்க்கமாட்டோம்.

அதேவேளை, அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் சில குறைப்பாடுகள் உள்ளன. அவை சீர்செய்யப்படவேண்டும். ஆனால், ஜனாதிபதியின் பதவிகாலம் உட்பட மேலும் சில விடயங்கள் மாற்றியமைக்கப்படக்கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம் - என்றார்.

## சுயநிர்ணய உரிமைக்கே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று பகிரங்கமாக அறிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவரது உரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கக் கோரியே வடக்கு கிழக்கில் மக்கள் ஏகோபித்த ஆணை வழங்கியிருக்கிறார்கள். நான் ஏகோபித்த ஆணை என்று குறிப்பிடும்போது (சபையை வழிநடத்திக் கொண்டிருந்த குழுக்களின் துணைத்தலைவர் அங்கஜன் இராமநாதனைப் பார்த்து) அரச தரப்பிலுள்ள உங்களையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். தமிழர்கள் உரிமை என்பது எங்களின் அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதையே குறிக்கின்றது. இலங்கை பல்லினங்கள் வாழும் நாடு. இங்கு இரண்டு தேசங்கள் உள்ளன. இவ்விரண்டு தேசங்களினதும் உரிமைகள் சமனானதாக இருக்க வேண்டும். அவற்றின் தராதரமும் சமனானதாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே அரசமைப்பு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த தேர்தலில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வடக்கு - கிழக்கில் ஒருமனதாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலில் வெற்றிபெற்றபின்னர், மக்களுக்கு வழங்கிய நன்றியுரைகளில் தமிழ்மக்களின் உரிமைகள் வழங்கப்படுவதனை நாங்கள் எதிர்க்க மாட்டோம் என்று கூறியுள்ளீர்கள். தமிழ் பகுதிகளில் அபிவிருத்தியினை ஏற்படுவதனைப் பற்றி கூறுகிறீர்கள். அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் வரை தமிழ் மக்களின் உரிமைகள் விடயத்தில் நாங்கள் காத்திருக்க முடியாது.

டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி கட்சி தனது தேர்தல் பிரசுரங்களில் 'தமிழர் தேசம் தலைநிமிர' எனக் குறிப்பிட்டிருந்தது. அதுதான் அவரது தேர்தல் கோசமாகவிருந்தது. நாங்கள் ஒரு தேசம் என்ற நிலைப்பாடு ஏகோபித்த விதத்தில் அமைந்திருக்கிறது. ஆகவே இந்த ஆணையினை நாம் மீறமுடியாது. கடந்த 72வருடகால சரித்திரத்தில் தமிழ் மக்களால் இந்த ஆணை தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

இன்னுமொரு விடயத்தை நான் எடுத்துக் கூறவிரும்புகிறேன். ஜனாதிபதி அவர்கள் தனதுரையில் இறையாண்மை பற்றி பேசினார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இறையாண்மை விடயத்தில் விட்டுக்கொடுப்புகளைச் செய்யப்போவதில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார். ஒரு ஜனாதிபதியாக அவர் அவ்வாறு கூறுவது சரியானதாக இருக்கலாம். ஆனால் அவர் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும், சர்வதேச உறவுகள் என்று வரும்போது, இறைமையுடன் தொடர்புபட்ட சில கடப்பாடுகள் உள்ளன. ஒரு நாட்டில் வாழும் ஒரு தொகுதி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலையில் இறையாண்மை கேள்விக்குள்ளாக்கப்படும். அரசே அதன் சொந்தக் குடிமக்கள் மீது தாக்குதல் நடத்துவது அதனிலும் மோசமானது. இவ்வாறான சூழலில் இறையாண்மையைக் காட்டித் தப்பிக் கொள்ள முடியாது.

இந்த நாடு ஒரு போரை எதிர்கொண்டிருந்தது. இங்கு மிக மோசமான குற்றச்செயல்கள் நடந்தன என முழு உலகமும் கூறுகிறது. குற்றஞ்சாட்டப்படும் தரப்புகளில் அரசே முதலிடத்திலிருக்கிறது. எந்தவொரு ஜனாதிபதியோ, நாடுகளோ நாட்டின் இறையாண்மையை காரணங்காட்டி இக்குற்றச் செயலுக்கும் பொறுப்புக் கூறுவதிலிருந்து தப்பிவிட முடியாது. இக்குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட முதன்மையான தரப்பாக தமிழர்களே உள்ளனர். அவர்கள் தாம் இனப்படுகொலைக்கு உள்ளாகி வருகின்றனர் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்திக் கூறி வருகிறார்கள். இவற்றுக்கு பொறுப்புக்கூறலை ஏற்படுத்த ஒரு சர்வதேசப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்பதனையும் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

இறுதியாக, ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்தில் பொருண்மிய மேம்பாடு விடயத்திலும், வேறு சில விடயங்களிலும் சில வரவேற்கத்தக்க அம்சங்கள் உள்ளமையையும் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு விடயங்களை குறிப்பிட்டுக் கூறவிரும்புகிறேன். ஒன்று இலங்கை கடற்பரப்பில் வெளிநாட்டு மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பானது. இரண்டாவது, காணியற்ற மக்களுக்கு காணி உறுதி வழங்குவது தொடர்பாகவும் பேசியிருக்கிறார். இவற்றை நான் வரவேற்கிறேன். ஆனால் ஜனாதிபதி ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். முப்பது வருடங்களுக்கு மேலாக வடக்கு - கிழக்கு ஒரு யுத்த வலயமாக இருந்திருக்கிறது. வடக்கு கிழக்கு மக்களின் பொருண்மியம் ஏனைய பகுதி மக்களுடன் ஒப்பிடும்போது முப்பது வருடங்கள் பின்நோக்கியதாக இருக்கிறது. இவ்வியடத்தில் வடக்கு கிழக்கு மக்களை மற்றைய மக்களுடன் ஒன்றாக கணிப்பிட முடியாது. நீங்கள் அவர்களை பாதுகாக்க வேண்டும். அவர்களது பொருண்மியம் மேம்படுத்தப்படுவதற்கு அனுமதிக்க வேண்டும். அதற்குப் பின்னரே மற்றைய மக்களுக்கு இணையாக அவர்களைக் கணிக்க முடியும். - என்றார்.

**மணமகன் தேவை**

விஸ்வகுலத்தில் 1988இல் பிறந்த மணமகளிற்கு (software Engineering) அதே குலத்தைச் சேர்ந்த உத்தர நட்சத்திரம், கன்னி ராசியில் உள்ள மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு - **அ. பெ. இ - 01**
**'காலைக்கதிர்'**
**இல - 30, கல்லூரி வீதி ,**
**யாழ்ப்பாணம்.**

**நிரந்தர வேலைவாய்ப்பு**

வட பகுதியில் இயங்கி வரும் எமது முன்னணி நிறுவனமான **NFlash Super Detergent** புதிய கிளைகளுக்கான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கான புதிய நபர்களை இணைத்துக்கொள்ளும் நேர்முகத் தேர்வு 10முதல் A/L வரை மூன்று மாத பயிற்சியின் போது 15000 வருமானம் பயிற்சியின் பின் 40000/= மேல் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

மேலதிக சேவைகள் - **EPF, ETF, Medical,** ஆங்கிலம் சிங்களம் கற்பதற்கான வசதி பதவி வெற்றிடங்கள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு - 021 222 2855, 0775521626

607a, KKS Road, Jaffna

**கடைகள் வாடகைக்கு தேவை**

**சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் நகர்ப் பகுதிகளில் கடைகள் வாடகைக்கு தேவை**

தொடர்புகளுக்கு - **076 740 3814**

காலைக்கதிர் Kalaikkathir









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2020 இல் வெளியிடப்பெற்றது.